275

தொகுதி 10.] 1931 ஹு டிசம்பர் மீ [பகுதி 11.

12 JAN 19

2088

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 5-பாகம் விலை ரூபா 10-0-0

அமராவதி 2-ரூபா.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலப் பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

கேசவநாதனின் கட்டளையை மறுக்கக்கூடிய தைரியம் சுகசிங்கம்பிரபுவுக்கு இல்லை. ஆகவே அப்பிரபு ஒன்றும் பேசாமல் அப்பெண்ணை அந்த இயந்திர நாற்காலியினின்றும் விடுதலை செய்துவிட்டான். அப்பெண் இச்சம்பவத்தைப் பற்றித் தன் பெற்றோர்களிடமோ அல்லது வேறெங்குமோ சொல்லக்கூடாதென்னும் எண்ணத்துடன் பிரபு அவளுக்குக் கைநிறைய பணத்தைக் கொடுத்து அனுப்பினான்.

இக்காட்சியைக் கண்டபிறகு ஒரு நிமிஷமேனும் அம்மாளிகையில் இருப்பதற்கு கேசவநாதனுக்கு மனம் பிடிக்கவில்லை. அவன் தன்னுடன் தன் சகோதரி தெய்வயானையையும் அழைத்துக்கொண்டு போய்விடவேண்டுமென்றும் இனி அவளும் ஒரு நிமிஷமும் அம்மாளிகையில் தங்கலாகாதென்றும் கூறினான். சுகசிங்கம்பிரபு தன் மானக்கேடான சங்கதி யொன்றையும் வெளியிடவேண்டாமென்றும், அது தெய்வயானைக்கும் தெரியலாகாதென்றும், கேசவநாதனிடம் கேட்டுக்கொண்டார். இயல்பாகவே பிறரை மன்னிக்கும் சுபாவம் வாய்ந்த அவ்வாலிப உத்தமன் தன் சிற்றப்பனை மன்னித்து, தான் எதையும் எங்கும் வெளியிடுவதில்லையென வாக்களித்துத் தன் சகோதரியை அதே இரத்தினபுரிக்கு அடுத்த ஒரு ஊரில் வசிக்கும் மற்றொரு பந்துவின் வீட்டில் விட்டுவைப்பது என்று ஏற்பாடு செய்தான். தெய்வயானையும் அவ்வேற்பாட்டின்படியே அங்கு சென்று சேர்ந்து சௌக்கியமாக இருப்பதை அறிந்த பின்னர் தான் வெகு நாளாக மனதில் எண்ணிவந்தபடி அத்தேசத்தின் வடபாகங்களின் இயற்கை வளங்களைச் சுற்றிப்பார்த்து கண்டுகளிக்கப் புறப்பட்டுவிட்டான்.

186563.
சென்னை-600 005

இவ்வாறு புறப்பட்ட கேசவநாதன் ஒருவருஷ காலம் வரை பல இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு இரத்தின

புரிக்குத் திரும்பிவந்தான். அவ்வாறு வரும்போது தன் சகோதரி தெய்வயானை, தான் விட்டுச்சென்ற பந்துவின் வீட்டிலேயே இருப்பாள் என நினைத்தான். ஏனெனின் தனக்கு அவளிடமிருந்து சொற்பகாலத்துக்குமுன் கிடைத்த கடைசி கடிதம் அப்பந்துக்கள் இருக்கும் ஊரிலிருந்து தபா லில் போடப்பட்டிருந்தது. ஆனால் அவன் இரத்தினபுரிக் குத் திரும்பிவந்தபோது அவள் தன் சிற்றப்பனை அயோக் கியசிகாமணி சுகசிங்கம்பிரபுவின் மாளிகையில் இருப்பதைக் கண்டு மிக ஆச்சர்யமடைந்தான். பிறகு அவளை விசாரித்த தில், கேசவநாதனுக்குக் கடைசி கடிதம் எழுதியபின்னர் அவளுக்கு அந்த ஊரில் இருக்கப் பிடிக்கவில்லையென்றும், ஆதலின் அவள் இரத்தினபுரிக்கு வந்துவிட்டபோது அவ ளிடம் அதிக விசுவாசமும் ஆர்வமும்கொண்ட சுகசிங்கம் பிரபு அவளை அன்புடன் வரவேற்று மாளிகையில் வைத்துக் கொண்டதாகவும் தெரிந்துகொண்டான். மேலும் அவள் அடுத்த ஊரில் தன் பந்துக்களுடன் இருந்தபோதே அங் கிருந்த தேவாரயன் என்பவனிடம் காதல் கொண்டிருந்தாள். அவன் அவளைவிட வயதில் எவ்வளவோ மூத்தவனாய் இருந் தும் எப்படியோ அவளுடைய மனதைக்கிரகித்துவிட்டான். கேசவநாதன் திரும்பிவந்ததும் தான் சுகசிங்கம் பிரபுவின் மாளிகைக்குத் திரும்பிவந்ததற்காகத் தன்மீது அவன் கோபிப் பதையும், தன்னை அடக்க அவன் முயற்சிப்பதையும் கண்ட தெய்வயானை தேவாரயனிடம் சென்று முறையிட்டுக்கொண்டு அவனை விவாகம் செய்துகொண்டுவிட்டாள். தேவாரயன் மிக வயதானவனாயிருந்ததால் தம்பதிகள் ஜோடி சரியா யிருக்கவில்லை. இவ்விஷயத்தில் சுகசிங்கம்பிரபுவுக்கு அதிருப்தி அதிகம் ஏற்பட்டுவிட்டதால் அவர் இனி அவளையும் அவள் கணவனையும் தன் வீட்டில் சேர்ப்பதில்லையென முடிவு செய்து விட்டார். கேசவநாதனுக்கும் திருப்தியில்லையென்றாலும்

அவன் மட்டும், அத்தம்பதிகள் அப்போதே வந்து புதிதாகக் குடியேறிய பள்ளத்தோட்டம் மாளிகைக்குச் சென்று அவர்களைக் கண்டான். ஆனால் விரைவில் கேசவநாதன் வேறு அவசரகாரியமாக இரத்தினபுரியை விட்டு அந்நாட்டின் தெற்குப்பாகத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யச் சென்றான்.

அவன் இரத்தினபுரிக்குத் திரும்பிவந்தபோது தன் சகோதரியைக் காணும்பொருட்டுப் பள்ளத்தோட்டம் மாளிகைக்குச் சென்றான். அவன் அந்த மாளிகையின் வாயிலில் புகும்போதே முன்புறத்திலிருந்த தோட்டத்தின் அடர்ந்த புதர்களின் அருகிலிருந்து தெய்வயானை பேசுவதுபோன்ற சத்தம் கேட்டது. அங்கே அவள், தன் கணவனுடன் இருப்பாளெனக் கேசவநாதன் கருதினான். ஆகவே அவன் அச்சத்தம் உண்டான இடத்தைநோக்கிச் சென்றான். அங்கே தன் சகோதரி தெய்வயானை தனக்குத் தெரியாத யாரோ ஒரு புதிய கனவானின் 'காத்தில் இன்பமாக இருப்பதைக் கண்டு திகிலும் ஆச்சர்யமும் அடைந்தான். அந்த ஆடவர் தான் அருமைநாதம்பிரபு. இதைக்கண்ட கேசவநாதனுக்குக் கோபம் அதிகரித்துவிட்டபடியால் தன் சகோதரியைக் கெடுத்த அவ்வாடவனைக் கண்டிக்க முயன்றபோது தெய்வயானை தன் சகோதரனிடம் பணிந்து, இச்சம்பவத்தைப்பற்றி வெளியில் தெரிந்தால் பல கஷ்டங்களும் அவமானமும் ஏற்படுமாதலால் தன்னை மன்னித்து அதை எங்கும் வெளியிடாமல் இருக்கும்படியும், தன்னையும் அவ்வாடவனையும் மன்னித்துவிடும்படியும் கேட்டுக்கொண்டாள். கேசவநாதனும் தன் கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டானென்றாலும் உடனே அவ்விடத்தை விட்டுச் செல்லும்படி அருமைநாதம்பிரபுவுக்குக் கட்டளையிட்டான். பிறகு அவன் தன் சகோதரியின் அருகில் உட்கார்ந்துகொண்டு மிக வருத்தத்துடன்

அவள் குற்றத்துக்காக அவளைக் கடிந்துபேசினான். அவளும் தன் குற்றத்தை மறைக்கமுடியாமல் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆயினும் தன் குற்றம் ருஜுப்பிக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டதால் அவள் சிறிது தைரியத்துடன், தன் சகோதரன் தன்மீது மேற்பார்வை செலுத்துவதைத் தான் விரும்பவில்லை என்று தெரிவித்தாள். அவள் தன் குற்றத்துக்காக மனம் வருந்துவாளென்று நினைக்க அவள் அதற்குமாறாகத் தன்னையே எதிர்க்கும் பான்மையைக் கண்டு கேசவநாதன் அருவருப்படைந்தான். ஆயினும் தன் சகோதரியை எப்படியாவது திருத்தவேண்டுமென்னும் ஆவலுடன் அவளிடம் அன்புடன் பரிந்துபேசி அவளது குற்றத்தை உணர்த்தமுயன்றான். ஆனால் அவன் எவ்வளவுக்கெவ்வளவு அன்புடன் பேசமுயன்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவள் அவன்மீது கடிந்து அவன் அதிகாரம் செய்வதைக் கண்டித்தாள். ஆகவே சகோதரனும் சகோதரியுமாகிய அவ்விருவரும் பரஸ்பரம் கோபத்துடனும் வெறுப்புடனும் பிரியவேண்டியதாயிற்று.

பிறகு கேசவநாதன், தான்சேர்ந்த குடும்பமே மானங்கெட்டதென்றும், அத்தகைய குடும்பத்துடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பதே மானக்கேடான காரியமென்றும் உணர்ந்தான். மேலும் பிரபுக்கள் குடும்பமென்றும், பெரிய மனிதர்கள் குடும்பமென்றும் சொல்லப்படும் இடங்களிலேயே அபரிசுத்த வாழ்க்கையும் அயோக்கியத்தனமும் சகஜமாக இருக்கிறதென்பதை அநுபவத்தால் கண்ட அவன் தன் மனதில் பின்வருமாறு சொல்லிக்கொண்டான்:—

"நான் எப்போதேனும் விவாகம் செய்துகொள்வேனேயாயின் இத்தகைய பிரபுக்கள் குடும்பத்துப்பெண்ணை நான் கண்ணெடுத்தும்பாரேன். ஏழை எளியார்வீட்டுப் பெண்ணை

யினும் கற்பு, ஒழுக்கம், கபடமின்மை, நற்குணம் முதலியவை வாய்ந்தவளாக இருப்பவளையே நான் மணந்துகொள்வேன். அப்பெண்ணுக்கு இயற்கையழகு இருக்கவேண்டுமே தவிர பெண்கள் செய்யத்தகாத தீயசெயல்கள் இன்னதென்றே அறியாதவளாக அப்பெண் இருக்கவேண்டும். இவ்வாறு தீர்மானம் செய்துகொண்ட அவன், தன் பட்டப்பெயரையும் குடும்பத்தையும்விட்டு ஜகதீசன் என்னும் மாறு பெயருடன் ஏகாங்கியாகப் புறப்பட்டுவிட்டான். உடனே இரத்தினபுரியைவிட்டுச் சென்று தான் பாலியத்தில்படித்த ஊருக்குச் சென்று சொற்பகாலம் அங்கு தங்கியிருந்து பிறகு அடுத்த தேசம்சென்று அங்கு சிறிதுகாலமிருந்து பின்னர் மீண்டும் இரத்தினபுரிக்கு வந்து அதற்கடுத்த ஊர்களில் சுற்றிக் கொண்டிருந்தான். இறுதியாக அவன் கந்தபுரிக்கு வந்து சேர்ந்தான். அந்நகரம் மிகப் பண்டைப் பெருமை வாய்ந்த பெரிய கோயிலொன்றை உடைத்தாயிருந்தது. மேலும் அதன் இயற்கை வனப்பு மனதைக் கவரத்தக்கது. ஆகவே ஜகதீசன் என்னும் மாறுபெயரையுடைய கேசவநாதன் இரண்டொரு வாரங்கள் கந்தபுரியில் தங்கினான். ஒரு நாள் மாலை அவன் நகரத்தையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுத் தான் தங்கியிருந்த ஓட்டலுக்குச் செல்வதற்காக அவ்வூர் கோயிலுக்கடுத்த தோட்டத்தின் வழியே சென்று கொண்டிருந்தபோது சிறிது தூரத்தில் மறைவான இடத்தில் யாரோ ஒரு ஆடவனுக்கும் ஒருஸ்திரீக்கும் பெருத்த வாக்கு வாதம் நடைபெறுவதுபோல் அவன் காதில் கேட்டது. உடனே அவன் அவ்விடத்தைச் சமீபித்து மறைவில் நின்று விஷயத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். அப்போது ஒருமாது பின்வருமாறு சொல்வது அவனுக்குக்கேட்டது:—

"அடா! பாவி! சில வருஷங்களுக்குமுன் என்னை மயக்கி என் கற்பைக்கெடுத்ததுடன் எனக்குப் பிறந்த குழந்தையை

யும் கொன்று விடும்படி உபதேசம் செய்தாயல்லவா? உனக்கே பிறந்த குழந்தையைக் கொன்றுவிடும்படி சொல்ல உனக்கு மனம்வந்ததே! அதுமட்டுமா? நான் உன்னை நம்பி உன்னுடன் கள்ளக் கூட்டுறவுபெற்று அதனால் பிரசவித்திருக்கும்போது என்னைத் தனியேவிட்டு என் கதி யாதாகும் என்பதைப் பற்றியும் கவலைகொள்ளாமல் எங்கேயோ மறைந்து விட்டாயே. பிறகு நான் பைத்தியம் பிடித்தவள் போல் திக்பிரமையடைந்து இன்னது செய்வதென்று தோன்ருமல் ஸ்மரணை தப்பியிருக்கிற நிலைமையில் எனக்கும் தெரியாமலே நான் அச்சிசுவைக் கொன்றுவிட்டேன். உடனே போலீசார் என்னைக் கைதுசெய்து என்மீது கொலைக்குற்றத்தைச் சுமத்தினார்கள். ஆனால் இறைவனருளால் நான் தப்பினேன். இப்படியும் செய்யலாமா?"

இவ்வாறு அம்மாது சொன்னதைக்கேட்ட கேசவநாதன் திடுக்கிட்டு இப்படியும் நேர்ந்திருக்குமா யென்று நினைத்து இன்னும் நன்ருய் அதை அறியவேண்டுமென்னும் ஆவலுடன் மறைந்துநின்று உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான். அப்போது அம்மாது திடீரென்று ஓவென்று அழுது தன்மீது இரக்கம் காட்டவேண்டுமென்று தன் எதிரிலிருந்த ஆடவனைக் கெஞ்சிக்கேட்டாள். அந்த ஆடவனே அவளைப் பார்த்து, "பிசாசுமாதிரி என்னைப் பின்தொடராதே" என்று மிரட்டி அவள் தன்னைப் பின்தொடர்ந்து வந்தால் கொன்று விடுவதாகவும் அச்சுறுத்தினன். அப்போது கேசவநாதன் ஆத்திரத்துடன் அவர்களிருவரும் மறைந்திருந்த இடம் சென்று அவர்களைநோக்கினன். யாரோ ஒருமாது ஒரு ஆடவன் முன் முழங்காலிட்டுப் பணிந்து நிற்பதைக்கண்டான். அந்த ஆடவன் கந்தபுரிகோயில் அதிகாரியான சுவாமி சுகானந்தம் என்பதைக் கேசவநாதன் அறிந்துகொண்டான். தான் அந்

நகரில் தங்கியிருக்கும் சொற்பதினங்களில் சுகானந்தம் ஒரு வாசகசாலைக்கு அடிக்கடி வருவதை அவன்கண்டு அவனுடன் ஒன்றிரண்டு வார்த்தைகளையும் பேசியிருக்கிறான். அந்தமாது கரிய உடையை அணிந்திருந்தாள். அவள் லீலாவதியே என்பதை நேயர்கள் உணர்ந்திருக்கலாமென்று நம்புகிறோம். ஆனால் அப்போது கேசவநாதனுக்கு அவளைப்பற்றி ஒன்றுந்தெரியாது. சுகானந்தன் தன் கையிலுள்ள ஆயுதத்தால் அம்மாதின் தலைமீது அறைவதாக இருந்தான். ஆனால் ஒருபுதிய ஆடவன் அங்குத்தோன்றியதால் அவர்களிருவருமே திகைப்படைந்தனர். உடனே லீலாவதி தன் முகமூடியை இழுத்துக்கொண்டு, அங்கு நற்சமயத்தில் தோன்றிய கேசவநாதனின் கையைப் பிடித்துக்கொண்டு, "ஐயா, நீ யாராயிருந்தாலும் சரி, உனக்கு ஆயிரம்வந்தனம். நீ நல்லெண்ணத்துடன் எங்கள் விஷயத்தில் பிரவேசித்தது பாராட்டத்தக்கதே. ஆயினும், நீ ஒரு விஷயத்தைப்பற்றி எனக்கு உறுதிமொழி யளிக்காவிட்டால் என் வந்தனத்துக்கு நீ உரியவனாகமாட்டாய்'' என்று கூறினாள்.

உடனே மிக்க தாராள நோக்கமுடைய கேசவநாதன், தான் மறைவிலிருந்து விஷயத்தைக் கேட்டறிந்ததன்மூலம் முன்னரே மன விசாரப்பட்டிருப்பதாக அறியும் ஒருமாதை இன்னும் அதிக துயரத்துக்குள்ளாக்கத் தனக்கு மனம்வராதென்றும், ஆதலின் தான் அவளுக்கு இஷ்டமில்லாத எந்தக் காரியத்தையும் செய்யப்போவதில்லை என்றும் உறுதி கூறினான். எனவே அம்மாது, "அப்படியானால் இப்போது நீ பார்த்த இச்சம்பவத்தைப்பற்றி எங்கும் யாரிடமும் வெளியிடுவதில்லையென எனக்கு வாக்களித்துவிடு," என்று கேட்டாள். அதற்குக்கேசவநாதன், "அம்மையே! உனக்கும் சுகானந்தத்துக்கு மிடையிலுள்ள பிரத்யேகமான விஷயம், பொது

ஜனங்களின் வம்புக்குப் போய்ச்சேரும்படி நான் நடந்து கொள்ளமாட்டேன். எனது சுபாவம் அப்படிப்பட்டதல்ல என்பதை நீ நிச்சயமாக நம்பவும்" என்று உறுதியுடன் கூறினன். ஒருவிஷயம் நடந்ததாகவே இருந்தாலும் நமக்குச் சம்பந்தமில்லாத அதைப்பற்றிக் கண்ட இடத்திலெல்லாம் பிரஸ்தாபித்துக்கொண்டு வீண்வம்பு பேசுவது தகாது. சில அறிஞர்கள் இவ்வாறு தாம் கண்டதையும் கேட்டதையும்பற்றி அப்போதே மறந்துவிடுகின்றனர். ஆனல் வேறு பல பெரியார்கள் அரைகுறையான விஷயம் அகப்பட்டாலும் அதற்குப் பூரா லட்சணங்களையும் தாங்களாகவேனும் கொடுத்துக் கண்ட இடத்திலெல்லாம் அதைப்பற்றிப் பெருமையாகப் பேசித் திரிவார்கள். ஆனல் நமது கேசவநாதன் அப்படிப்பட்ட பெரியார்களைச் சேர்ந்தவனல்ல. அடக்கமும் பெருந்தன்மையும் உடையவன். ஆதலால் தான் பிறரைப்பற்றிய விஷயத்தை ஏன் வெளியிடவேண்டுமென்று நினைத்து, தான் அதை வெளியிடுவதில்லையென வாக்குறுதியும் அளித்தான். அதற்காக லீலாவதி அவனுக்கு வந்தனம் செலுத்திவிட்டு உடனே அவ்விடத்தைவிட்டு மறைந்தாள். சுகானந்தமும், "ஜகதீசா! நீ இப்போது அளித்த வாக்குறுதிக்காக நானும் உனக்கு வந்தனம் செலுத்துகிறேன்" என்று கூறினன். கேசவநாதன் வணக்கத்துடன் தலை குனிந்துவிட்டு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுத் தான் தங்கியிருக்கும் ஓட்டலுக்குச் சென்றான்.

அதே தோட்டத்தில்தான் சொற்பதினங்களுக்குப் பின்னர், மகா கொடியவனான சுகானந்தன் கோமளவல்லியை ஹிம்சித்தபோது தற்செயலாய்க் கேசவநாதன் அவ்வழியே வந்து அவளை மீட்டதனல்தான் அவனுக்கும் அவளுக்குமிடையில் அன்பு ஏற்பட்டதென்பதை நாம் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லையென்றே நம்புகிறோம். அத்தோட்

டத்தில் சுகானந்தம், உத்தமிகளிற் சிறந்த கோமளவல்லி யைக் கெடுக்கமுயன்ற சம்பவமும் ஒரு விஷயத்தில் நல்ல தாகவே முடிந்தது. உத்தமசீலனுன கேசவநாதனும், உத்த மப்பெண் கோமளவல்லியும் பரஸ்பரம் சந்தித்து சினேகத்தை ஏற்படுத்திக்கொள்ள அத்தீயசம்பவம் காரணமாக இருந்தது. ஆதலின் சிற்சில சமயங்களில் நடைபெறும் கெட்ட காரியங் களும் வேறு பல நன்மைகளுக்குக் காரணமாக இருந்துவிடு கின்றன என்பதைக் கவனிக்கும்போது அத்தகைய முடிவை ஏற்படுத்தும் எல்லாம்வல்ல இறைவனை வழுத்தாமலிருக்க முடியவில்லை. கேசவநாதன், தன் சகோதரி, சிற்றப்பன் முதலியவர்களுடைய கெட்ட நடத்தைகளைக் கண்டு வெறுப் படைந்து அக்குடும்பத்தின் சம்பந்தத்தையே அறுத்துக் கொண்டு தனியாகப் புறப்பட்டபோது அவன் தன் மனத் துள் சொல்லிக்கொண்டதுபோலத் தான் மனமார விரும்பிய படி உத்தம லட்சணங்களையுடையவளும், எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவளுமான ஒரு பெண்ணின் சம்பந்தமே அவனுக்கு அச்சமயத்தில் ஏற்பட்டதும் சந்தோஷிக்கத் தக் கதேயாகும். மேலும் அக்காதலர்கள் எவ்வாறு அடிக்கடி சந்தித்தார்களென்பதையும், எவ்வாறு அவர்களுடைய காதல் முற்றி வளர்ந்ததென்பதையும், நாளுக்குநாள் அவர்களிரு வரும் பரஸ்பரம் எப்படி தங்கள் அன்பையும் நட்பையும் அதி கரிக்கச் செய்துகொண்டார்களென்பதையும் நாம் இதற்கு முன் பல அத்தியாயங்களில் படித்திருக்கிறோம். முதலில் கேசவநாதன் கோமளத்தைச் சந்தித்து முதன்முறை அன்பை ஏற்படுத்திக்கொண்டபோதே தான் உண்மையில் யார் என் பதைத் தெரிவித்துவிடலாமென நினைத்தான். ஆனல் அவள், தன்னை எளிய மனிதன் என்பதற்காகவே காதலிக்கவேண் டுமே யொழிய பொருளையோ அந்தஸ்தையோ யோசித்துக் காதலிக்கக்கூடாதென்னும் எண்ணம் தோன்றியதால் தன்

ளைப்பற்றிய உண்மையை அறிவிக்காமல் சொற்பகாலம் இருந்துவிடுவதெனத் தீர்மானித்தான். மேலும் அவன் உண்மையிலேயே தான் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவனோ அக் குடும்பத்தைச் சேர்ந்த பலர் மிக்க இழிதகைமையுடன் நடந்துகொள்வதால் தான் சுகசிங்கம்பிரபு போன்றவர்களின் உறவினன் என்று சொல்லிக்கொள்ளவும் அவன் வெட்கமடைந்தான். கோமளவல்லியின் சகோதரியாகிய கற்பகவல்லி, மதனவல்லி என்னும் பெயரால் அப்போது இரத்தினபுரியில் இருந்தபடியால், அவள் தன் சகோதரியாகிய கோமளம் காதலிக்கும் ஜகதீசன் என்பவன் யார் என்று விசாரிக்க ஆரம்பித்தால் அவளுக்குப் பூராவிவரமும் தெரிந்துவிடாமலிருக்கும்பொருட்டுத் தன்னைப்பற்றித் தகவல் சொல்லக் கூடிய நிலைமையில் இருந்த பாங்கிக்காரரிடம் தன்னைப்பற்றி யாரேனும் விசாரித்தால் இவ்வளவு அளவுதான் செய்தியை வெளியிடலாமென ஜகதீசன் அறிவித்துவிட்டிருந்தான். ஆதலினுல் கற்பகவல்லி பாங்கிக்குச் சென்று ஜகதீசனைப்பற்றி விசாரித்தபோதும் ஓரளவு தகவல்மட்டுமே கிடைத்தது.

கேசவநாதன் கோமளவல்லியிடம், தான் அவளைக் காதலிப்பதாகத் தெரிவித்து அதற்கு அவளும் சம்மதித்தபோது அவன், தன் விவாகத்துக்குப் பின்னர் அவளையும், அவளது அத்தையையும் அத்தேசத்தின் வடபாகத்திலிருந்த தன் கிராமத்துக்கு அழைத்துச்சென்று விடுவதென முடிவு செய்தான். ஆனுல் அவ்வூரிலிருந்த தன்வீட்டைப் பார்த்தபோது, இடையில் சொற்பகாலம் அதில் யாரும் தங்கியிருப்பாரில்லாமல் மேற்பார்வை இல்லாமற்போகவே அது சிற்சில இடங்களில் பாழடைந்திருந்ததுடன் கோமளவல்லி போன்ற அழகிற்சிறந்த பெண்மணி வசிப்பதற்கு இன்னும் சில திருத்தங்களைச் செய்யவேண்டியிருந்ததுடன் சில சாமான்களையும்

வாங்கவேண்டியது அவசியமாயிருந்தது; அதுமட்டுமன்றி அவனுடைய ஊருக்கும், கோமளவல்லி தங்கியிருந்த கந்த புரிக்கும் வெகுதூரம் இருந்ததாலும், அப்போது கோமள வல்லியின் அத்தை பாரிசநோயால் வருந்திக்கொண்டிருந்த தால் அம்மாதைத் தனிவண்டியிலேயே அழைத்துச் செல்ல வேண்டியிருந்ததாலும், அவ்வண்டியில் நோயாளிக்குச் சௌகரியமாக இருக்கும்பொருட்டு சோபா போன்ற மெத்தை அமைக்கவேண்டியிருந்ததாலும் அத்தகைய வண்டி ஒன்றையும் கட்டி முடிக்கவேண்டியதாயிருந்தது. ஆனால் இதற்கெல்லாம் அவனிடம் பணமோ இல்லை. அவன் அவ்வளவாக வீண்செலவு செய்யாதவனல்லவென்றாலும் அவன் அடிக்கடி வெளிதேசங்களுக்குப் பிரயாணம் செய்து வந்ததால் தனக்குக் கிடைக்கும் வருவாயான வருஷவாரி அறுநூறு பவுன்களிலிருந்து ஒன்றும் மிகுத்தி வைத்துக் கொள்ளவும் முடியவில்லை. ஆகவே அவனுக்கு வேண்டியிருந்த பணத்தைப் பின்வரும் மூன்று வழிகளால் தான் அவன்பெற முடியும்போலிருந்தது. முதலாவது, அவன் தன் வருஷ வரும்படியில் ஒருபாகத்தை அடகுவைத்து யாரிட மேனும் கடன்வாங்குவது. ஆனால் அவ்வாறு செய்துவிட்டால் மிகுதியுள்ள பணத்தைக்கொண்டு தானும் தன் காதலியும் சௌகரியமாக வாழ்க்கையை நடத்தமுடியாதென்பதை உணர்ந்ததால் அவ்வாறுசெய்ய அவன் விரும்பவில்லை. இரண்டாவது, சுகசிங்கம் பிரபுவின் சொத்துக்களுக்கும் அவனே வாரிசுதாரனுகையால், அது அவனுக்கே கிடைக்கப் போகிறதென்பதை ஆதாரமாகக் காட்டித் தனக்குவேண்டிய பொருளைக் கடன் வாங்கலாமென நினைத்தான். ஆனால் அப்படியெல்லாம் பலகடன் தொல்லைகளில் அகப்பட்டுக் கொண்டு தன் கௌரவத்தைக் குறைத்துக்கொள்ளவும் அவன் விரும்பவில்லை. அத்தகைய முறையை அவன் அடி

யோடு வெறுத்தான். மூன்றுவது, தானே நேராகத் தன் சிற்றப்பனாகிய சுகசிங்கம்பிரபுவைக் கண்டு தனக்கு வேண்டிய பொருள் உதவிசெய்யும்படி கேட்டுக்கொள்வது. இதையும் அவன் விரும்பவில்லை. ஏனெனின் அவன், அயோக்கியசிகாமணியான தன் சிற்றப்பனை அவ்வளவுதூரம் வெறுத்தான். எனினும் இம்மூன்றுவது வழியைத் தவிர வேறு வழி சௌகரியமானதா யில்லாததாலும், பணம் அவசியமாக வேண்டி யிருந்ததாலும் தன் சிற்றப்பனைக் கண்டு உதவி கேட்பதென முடிவுசெய்தான். தான் இதைப்பற்றிச் சிறிது நேரம் தீர யோசித்துப்பார்த்ததில், தான் எப்படியிருந்தாலும் சுகசிங்கம்பிரபுவின் வாரிசுதாரனுகையால் தான் கேட்பது அவருடைய தயவை எதிர் பார்ப்பதுபோலாகாதென்றும், மேலும் தான் எதையும் மறைத்துவைத்து சூழ்ச்சி செய்யாமல் பகிரங்கமாக நேரில் சென்று கேட்பதால் அது தவறாகாதென்றும் தீர்மானித்துக் கொண்டான். ஆகவே அவன் நேராக இரத்தினபுரிக்குச் சென்று தன் சிற்றப்பனாகிய சுகசிங்கம்பிரபுவைக் கண்டு தனக்கு வேண்டிய பணத்தைக் கேட்டு வாங்கிக்கொண்டான். பணம் கையில் கிடைத்ததும் வீண் காலதாமதம் செய்யாமல் பணத்தில் ஒரு பகுதியைத் தன் ஊரிலுள்ள தனக்கு நம்பிக்கையான ஒரு நண்பருக்கு அனுப்பித் தன் மாளிகையை எவ்வாறு பழுதுபார்க்க வேண்டுமென்பதுபற்றியும் விவரமாகத் தகவலும் அறிவித்தான். மேலும் அதில் ஒரு சிறுபகுதியை இரத்தினபுரியிலுள்ள, அழகான வண்டிகளை அமைக்கும் தொழிலாளியிடம் கொடுத்துத் தனக்கு வேண்டிய முறையில் வண்டியை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டான்.

ஆனால் இந்த ஏற்பாடுகளெல்லாம் அவசரப்பட்ட காரியங்களாகவே முடிந்தன. ஏனெனின், அவன் இதன்பின்

னர், தன் விவாகத்தை விரைவில் நடத்திக்கொள்ள முடியாமல், நாம் இதற்குமுன் பல அத்தியாயங்களில் விவரித்த படி, இளவரசியைக் கெடுக்கும் எண்ணத்துடன் செய்யப் பட்ட சூழ்ச்சியில் மாகதவல்லியின் பெண்கள் மூவரும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைத் தடுத்து திக்கற்றவளாகிய இளவரசியைக் காப்பாற்றும் வேலையில் அவன் முழுமனதுடன் ஈடுபட்டுவிட்டதால் பல கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்க நேர்ந்ததுடன் தான் எதிர்பாராத அவ்வளவு நீண்ட காலம் சுற்றுப் பிரயாணத்தில் இருக்கவேண்டியதாகவும் நேரிட்டுவிட்டது.

கடைசியில் இப்போது அப்படிப்பட்ட கஷ்டமான வேலைகளெல்லாம் முடிந்து நமது வாலிபோத்தமனை கேசவ நாதன் ஜகதீசன் என்னும் மாறுபெயரையும் விட்டுத் தன் சொந்த பெயருடனும், உண்மையான அந்தஸ்துடனும் அவனது மனமார்ந்த காதலியாகிய கோமளவல்லியைச் சந்தித்து விரைவில் விவாகம் முடிக்கவேண்டிய சந்தர்ப்பத்தை யடைந்தான். நாம் இதுவரை மேலே கூறிவந்த விவரத்தையெல்லாம் கேசவநாதம்பிரபுவும், கந்தபுரிக்கடுத்துள்ள கோமளவல்லியின்வீட்டில் இராப்போஜனத்துக்குப் பின்னர், கோமளவல்லி, கற்பகவல்லி, அவர்களின் அத்தை என்று கருதப் பட்ட பெரிய தாயாராகிய சுந்தரம்மாளென்னும் கமலத்தினிடமும் விவரமாகக் கூறினான். ஆனால் இவ்விவரத்தை அவர்களிடம் கூறும்போது அவன் சர்வ ஜாக்கிரதையுடன் இருந்து காலஞ்சென்ற தன் சிற்றப்பன், அல்லது சகோதரியினுடைய கெட்ட நடத்தையைப்பற்றி அதிகம் விவரித்துக் கூறாமல் குறிப்பாகச் சொல்லிமுடித்தான். ஏனெனின், இறந்துபோனவர்களைப்பற்றி அவதூறாக ஒன்றும் பேசலாகாதென்றும், அத்தகைய கெட்ட விஷயங்கள் கோமளவல்லிக்கு வெறுப்பைத் தருமென்றும் அவன் கருதினான்.

மறுநாள், கோமளவல்லியின் பெரிய தாயாரான சுந்த ரம்மாளென்னும் கமலம் கேசவநாதனிடம் தனியாகப் பேசிக் கொண்டிருந்தபோது சமீபத்தில், சந்நியாசி சுகானந்தம் அவ் வீட்டிலேயே தந்திரமாகப்புகுந்து கோமளவல்லியை மான பங்கப்படுத்த முயன்றதையும், அப்போது தான் திடீரென்று தெய்வச் செயலாகத் தான் கொடிய பாதகனாயினின்றும் விடுதலையடைந்ததையும் விவரித்துக் கூறினுள். இதைக் கேட்ட கேசவநாதனுக்குச் சுகானந்தன்மீது கோபமும் ஆத் திரமும் அதிகரித்துவிட்டது. ஆனல் அவன் அதே மாதி னிடமிருந்து தன் சகோதரிகளாகிய மரகதவல்லி, மேனகை, லீலாவதி ஆகியவர்களின் விருத்தாந்தத்தையும் விவரமாகத் தெரிந்துகொண்டதால், தான் முதன்முதலில் கோயிலைச் சேர்ந்த தோட்டத்தில் சுகானந்தன்முன் முழந்தாளிட்டுப் பணிந்திருந்த கரிய முக்காடிட்டமாது லீலாவதியாகவே இருக்கவேண்டுமென்று உணர்ந்தான். ஆகவே அவளுக்காக வேனும் அக்கொடிய பாதகனுகிய சுகானந்தனை மன்னித்து அவனை அம்பலத்திலிழுக்காம லிருந்துவிடுவது நலமென நினைத்தான். அச்சமயத்தில் அவனுக்கோ அல்லது இவ்விஷ யங்களை அவனிடம் தெரிவித்த கமலத்துக்கோ, சுகானந்தனை லீலாவதி வெறுக்கிருள் என்பதும், எப்படியாவது பழிக்குப் பழி வாங்கிவிடவேண்டுமென்று தீர்மானித்திருக்கிருள் என் பதும் தெரியாது. அவள் பழையபடியே சுகானந்தனிடம் தணியாக் காதலுடையவளாய் இருக்கின்ருள் என்று நினைத்து அவளுக்கு மனவிசாரம் ஏற்படலாகாதென்னும் எண்ணத்துடன் அவனை மன்னித்து விடுவதென நிச்சயித் தான். மேலும் தான் இனித் தன் விவாகம் முடியும் வரை அங்கேயே தங்கியிருப்பதென நிச்சயித்துவிட்டபடியால் அவ ளுக்கு எத்தகைய ஆபத்தும் நேரிடாமல் காப்பாற்றலாம் என்றும் நினைத்தான்.

இவ்வத்தியாயத்தில் கூறப்பட்ட விஷயங்களால் உத்தமர்களுக்குத் தாங்கள் நினைக்கிறபடி காரியங்கள் மங்களமாகவே முடிகின்றன என்பது புலனாகின்றது. இதற்குத்தான் மனம்போல மாங்கல்யம் என்று சொல்வார்கள். நமது உத்தமவீரன் கேசவநாதன், தன் குடும்பத்தைவிட்டு மாறு பெயருடன் வெளியே புறப்பட்டபோது, தான் பிற்காலத்தில் எப்படிப்பட்ட பெண்ணை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று மனமாரக் கருதினானோ அதே லட்சணங்களையுடைய கோமளவல்லி அவனுக்குக் காதலியாகக்கிடைத்தாள். அவன் தான் கோரியதற்கேற்ப ஒழுக்கத்துடனும், டாம்பீகமின்றியும், "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்' என்பதாகப் பிறருக்குத் தொண்டுபுரிவதிலேயே கவலை செலுத்தியும் தன் வாழ்க்கையைப் பரிசுத்தமாக நடத்தியதால்தான் அவன் மனப்படி எதிர்கால சம்பவங்கள் நிகழ்வுற்றன. அவன் பிறரிடமிருந்து நற்குண நல்லொழுக்கங்களை எதிர்பார்த்து தான் மட்டும் தவறான வழியில் நடந்திருந்தால் தன் எண்ணம் கைகூடி இராது. "பிறர் எப்படி உன்னிடம் நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறாயோ, அப்படியே நீ அவர்களிடம் நடந்து காட்டவேண்டும்" என்பது ஏசுநாதரின் உபதேசமொழி. ஆனால் இதைப் பின்பற்றுவோர் மிகக்குறைவு. ஒவ்வொருவரும் தாம் எப்படி நடந்துகொண்டாலும் பிறர்மட்டும் தம்மிடம் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டுமென்றும், தாம் எண்ணும் எண்ணங்களெல்லாம் அப்படியப்படியே நிறைவேற வேண்டுமென்றும் கருதுகின்றனர். மனம்போல வாழ்க்கை யனுஷ்டானமும் இருந்தால் தான் மனம்போல மாங்கல்யமாக முடியுமென்பதை ஒவ்வொருவரும் அறிதல் நலம்.

173 - வது அத்தியாயம்

இப்போது நாம்மேலே கூறிய விவரம் நடந்த அதாவது கேசவநாதன் சந்தோஷமாகத் தன் காதலியாகிய கோமளவல்லியின் வீட்டில் தங்கியிருந்து, சுந்தரம்மாளென்னும் கமலத்தின் மூலம் பல விஷயங்களைக் கேட்டறிந்த, தினத்தின் மறுநாள் கந்தபுரிக்கடுத்ததும், துறைமுகப் பட்டணமாயு மிருக்கின்ற ஒருநகரில் சமுத்திர ஓரத்திலுள்ள மலைமீது நடைபெறும் பயங்கரமான ஒரு சம்பவத்தைக் கவனிப்போம். நாம் கூறும் அத்தினத்தன்று ஒரு அழகிய மாது நல்ல உடையை அணிந்துகொண்டு சமுத்திர ஓரத்திலுள்ள மலையில் சமுத்திரத்தின்மீது குடை பிடித்ததுபோல் பாவியிருந்த ஒரு குன்றின்மீது முன்னும் பின்னுமாக நடமாடிக்கொண்டிருந்தாள். அம்மாது உயரமானவளாயும், நல்ல தேகக்கட்டு வாய்ந்தவளாயும் இருந்தாள். ஆனால் அவள் முகம் மட்டும் முகமூடியால் மூடப்பட்டிருந்ததால் அவள் யாரென்று கண்டுகொள்ளவோ, அல்லது எத்தகைய நிலைமையில் அங்கிருக்கிறளென்று அறிந்துகொள்ளவோ முடியவில்லை. எனினும் அவள் சிறிது வயதானவளென்றும் ஏதோ ஒரு முக்கிய காரணமாகவே அங்கு இருக்கவேண்டுமென்றும் அவளைக் கண்டு எவரும் தெரிந்துகொள்வர்.

அப்போது பகல் மணி பன்னிரண்டு இருக்கும். சூரியன் மிக்க வெப்பத்துடனும் பிரகாசமாகவும் எரிந்துகொண்டிருக்கிறன். எங்கும் நிசப்தமாக இருக்கிறது. அடுத்துள்ள சமுத்திரமும் பெரிய அலையின்றித் தணிந்து இருக்கிறது. அம்மலைக்கு வெகுதூரத்தில் சமுத்திர ஓரத்திலுள்ள கட்டடத்

துக் கருகில் வெளிதேசத்துக்குப் புறப்படவேண்டிய கப்பல் ஆயத்தமாயிருக்கிறது. ஆனல் ஜனங்களெல்லாம் மாலையில் தான் வருவார்களாதலால் அந்த இடமும் அங்கோத்தில் சிறிதும் சந்தடியில்லாமலேயே இருந்தது. இந்நிலைமையில் அம் மாது மலைமீது இருந்துகொண்டபடியே சிறிதுநேரம் எதிரிலுள்ள சமுத்திரத்தின் அழகைக்கண்டு களிப்பதும் மறுநிமிஷமே மிக ஆவலுடன் நகரம் இருக்கும் பக்கம் திரும்பிப் பார்த்து யாரோ வருகிருர்களாயென்று மிக ஆவலுடன் எதிர் பார்ப்பதுமாக இருந்தாள். இதனல் அவள் யாரையோ எதிர் பார்க்கிருள் என்பது நிச்சயமாகத் தெரிந்தது.

அவள் அவ்வாறு மேலுங்கீழுமாக உலாவிக்கொண்டிருந்தபோது ஒருகுதிரை ஓடிவரும் சத்தம்கேட்டது. அதைக்கேட்டதும் அவள் தேகம் முழுதும் மின்சாரத்தால் இயங்கியதேபோல் உணர்ச்சிபெற்றது. ஏதோ ஒரு நினைப்பு அவள் உள்ளத்தில் தோன்றியதால்தான் அத்தகைய உணர்ச்சி தோன்றியது. உடனே அவள் அச்சத்தம் வந்த திசையைநோக்கி நடந்துவந்தாள். அப்போது குதிரைமீது வந்த மனிதனும் மலைமீது ஏறி அவளைச்சந்தித்தான். அம்மனிதன் யாரென்று நினைக்கிறீர்கள். கந்தபுரி மடத்தைச் சேர்ந்த சுகானந்த குருவேயன்றி வேறெருவருமில்லை.

அவன் அவளைச் சந்தித்ததும் தன் குதிரையை நிறுத்தி, அவளிடம், "நான் ஒட்டலில் உன்கடிதம் கிடைக்கப்பெற்று அதில் கூறப்பட்டபடியே நான் இப்போது இங்கே வந்திருக்கிறேன். ஆனல் நீ யாரென்றும், ஏன் என்னை இங்கு அழைத்தாயென்றும் எனக்குத் தெரியவில்லை. அழகிய மாதே என்ன சங்கதி" என்றுகேட்டான். அதற்கு அவள், "நான் அழகிய மாது என்று உனக்கு எப்படித்தெரியும்" என்று கேட்டாள். அதற்கு சுகானந்தன், "நீ எனக்கு அனுப்பிய கடிதத்தில் என்

னக்கண்டதும் உனக்கு என்பால் மோகம் அதிகரித்துவிட்டதென்றும், உன்னை நான் நேரில் காணும்போது கட்டாயம் நானும் உன்னை நேசிப்பேனென்றும் எழுதி இருந்தாயே. அதற்கு என்ன அர்த்தம்? நீ அழகில்லாதவளாக இருந்தால் அப்படி எழுதுவாயா? அக்கடிதத்திலிருந்தே நீ அழகுள்ளவள்ளவளென்பது தெரிகிறதல்லா?'' என்று பதில் கூறினன்.

அம்மாதும் அதற்குமேல் ஒன்றும் பேசவேயில்லை. ஒரு நிமிஷநேரம் இருவரும் மௌனத்துடன் இருந்தனர். பிறகு சுகானந்தன் குதிரைமீதிருந்து கீழே இறங்கி அவளை யணுகி, "ஓ, மாதே! சங்கோசப்படவேண்டாம். நீ யார் என்ன என்னும் சங்கதியைத் தெரிந்துகொள்ளாமல் நான் எந்நேரம் இருப்பது? உடனே உன் முக்காட்டை எடுத்து, நான் ஆவலுடன் காணவந்திருக்கும் நீயார் என்பதைத் தெளிவுபடுத்திவிடவும்'' என்று பரபரப்புடன் கேட்டான். அதற்கு அவள், "சுகானந்தம் குருவே! தயவுசெய்து நீ மீண்டும் குதிரைமீது ஏறிக்கொள். நீ குதிரைமேல் இல்லாமல் என் பக்கத்தில் நடந்துவந்தால் யாரேனும் பார்க்கிறவர்கள் நாம் இருவரும் அதிக சம்பந்தமுடையவர்கள் என்று நினைப்பார்களல்லவா? ஆதலால் நீ குதிரைமீதே ஏறிவந்தால் பார்ப்பதற்காவது கௌரவமாக இருக்கும். ஆதலால்தான் நீ குதிரைமீது வர வேண்டும் என்று எழுதியிருந்தேன். ஆகவே தயவுசெய்து குதிரைமீது ஏறிக்கொண்டு என்னுடன் வா'' என்று தாழ்ந்த குரலில் மெதுவாகச் சொன்னாள்.

மடாலயத்து குரு சுகானந்தன் உடனே அவளுடைய பேச்சைக் கேட்டு அதன்படி நடந்துவிடவில்லை. அவன் கூரிய பார்வையை அவளது முகமூடியின் வழியே செலுத்தி அவள் யாரென்று தெரிந்துகொள்ள முயற்சிப்பவனேபோல் அவளை உற்றுநோக்கினன். அவள் ஏன் இவ்வாறு சங்கோ

சத்துடன் நடந்துகொள்கிருளென்று கண்டுபிடிக்கவோ அல்லது அவள் இனி அவனுடன் என்னசெய்யப்போகிருள் என்பதையோ கண்டுகொள்ள முடியவில்லை. எனினும் என்னதான் நடக்கப்போகிறதென்பதைக் கவனிப்போம் என்றெண்ணி அவன் அவள் கூறியபடியே தன் குதிரைமீது ஏறிக்கொண்டான். அதனுல் அவளை உச்சந் தலைமுதல் உள்ளங் கால்வரை கவனிக்கச் சௌகரியமாயிருந்தது. அவன் குதிரைமீது ஏறிய சிறிது நேரத்துக்கெல்லாம் இவ்வாறு கவனித்துவிட்டு மெதுவாக, "ஆம்; இவளும் அவளைப்போலவே இருக்கிருள். ஆனுல் அவளே இங்கு வந்திருக்கமுடியாது" என்று முணுமுணுத்தான்.

அதை ஒருவாறு கேட்டுவிட்ட அம்மாது, "நீ என்ன சொல்லிக்கொண்டிருக்கிருய்" என்று கேட்டாள். அதற்கு அவன், "இப்போது உன்னுடன் இங்கு பேசிக்கொண்டிருப்பதால் எனக்கு மிகவும் பழக்கமான வேறொரு மாதின் ஞாபகம்வந்தது. அதைத்தான் சொல்லிக்கொண் டிருந்தேன்" என்று பதில் அளித்தான். அப்போது அம்மாது, "ஓ, நாம் இங்கு இதர மாதர்களைப்பற்றி ஒன்றும் பேசலாகாது" என்று மெதுவான குரலில் கடுமையாகச் சொன்னுள்.

அப்போது சுகானந்தன், "மாதே! என்னுடைய வார்த்தையைக் கேள். நீ எனக்கு எழுதிய கடிதத்தில் கூறியுள்ளவைகளெல்லாம் உண்மையாக இருக்குமானுல் அதில் நீ என்னை மிகைப்படுத்திப் புகழ்ந்திருக்கிருய் என்றே தெரிகிறது. நீ சில தினங்களாக என்னைப் பல இடங்களில் காண்பதாகவும், என் அழகைக்கண்டு நீ மோகித்துவிட்டதாகவும், நான் வழக்கம்போல் குதிரைமீது இந்த மலைக்குன்றுக்கு வரவேண்டுமென்றும் எழுதியிருந்தாயல்லவா? அப்படியே உன் கட்டளைப்படி நான் நடந்துகொண்டுவிட்டேன்.

நீதான் இன்னமும் உன் மர்மத்தை வெளிப்படுத்தாமல் இருக்கிறாய். நீ ஏன் உன் முகமூடியை அப்புறப்படுத்தி உன் உருவத்தை நான் காணும்படி செய்யலாகாது? ஏன் உன் குரல் தெரிந்துவிடாமலிருக்கும்படி மெல்லியகுரலில் பேசுகிறாய்? இதையெல்லாம் கவனிக்கும்போது உன்னிடம் ஏதோ மர்மம் இருப்பதாகவே தெரிகிறது. ஆகவே இனி ஒரு அடி எடுத்துவைக்க வேண்டுமானாலும் நீ உன் முகமூடியை அப்புறப்படுத்தி நீ யார் என்பதை எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்று வற்புறுத்திக் கூறினான்.

இவர்களிருவரும் இவ்வாறு பேசிக்கொண்டே மலைமீது நடந்துகொண்டிருந்ததால் அம்மலையின் சமுத்திரக் கரையோரத்திலுள்ள உச்சிக்குச் சமீபத்தில் வந்துவிட்டனர். ஆகவே அம்மாது துணிவுடன், "அப்படியா? என் முகமூடியை அப்புறப் படுத்தவேண்டியது அவசியமா? என் முகத்தை நீ பார்க்கவேண்டுமா? அவ்வாறாயின் இதோபார். நான் யாரென்று தெரிந்துகொள்" என்று ஆத்திரத்துடன் கூறிக்கொண்டே தன் முகமூடியை எடுத்து வீசி எறிந்தாள். உடனே அவள் லீலாவதியைத் தவிர வேறில்லை என்பது தெரிந்தது.

அவள் இன்னாளென்று தெரிந்ததும், சுகானந்தன், "ஓ, இரண்டொரு நிமிஷங்களாக இப்படி நேருமென்னும் சந்தேகம் எனக்குத் தோன்றிக்கொண்டிருந்தது," என்று கூறிக்கொண்டே அவளது மனதில் உள்ள எண்ணத்தை அப்படியே தோண்டி எடுத்துவிடுபவனேபோல் கூரிய பார்வையுடன் அவள் முகத்தையே உற்று நோக்கினான். அப்போது லீலாவதியும் அவனைக்கண்டு, "சுகானந்தரே! இதுதான் நமது இறுதியான சந்திப்பாகும். நாம் நிரந்தரமாகப் பிரிந்துவிடுவதற்கு முன்னர் நான்கூறும் சிலவார்த்தைகளை நீ கேட்க

வேண்டுமென்று மிக ஆவலுடையவளா யிருக்கிறேன்?'' என்று கூறினாள்.

சதா தன் பின்னால் மறைவாகவே திரிந்து தனக்குப் பெருந்தொல்லையாக இருக்கும் ஒருமாது இனி தன்னைச் சந்திக்கப் போவதில்லையென்று சொல்லக்கேட்டதும் சுகானந்தன் சிறிது சந்தோஷத்துடன், "லீலாவதி! அப்படியானால் உன் விஷயங்களைத் தெரிவி. இப்போது நாம் இவ்வாறு சந்திக்கும்படி நல்லெண்ணத்துடன் ஏற்பாடு செய்திருக்கிறாயா? அல்லது பகைமையுடன் ஏதேனும் செய்திருக்கிறாயா? என்பதையும் உடனே தெரிவித்துவிடு. இதுவே கடைசி முறை என்று நீ கூறுவதாகில் இப்போது நாம் சந்திப்பதில் நீ ஏன் இவ்வளவு மர்மங்களையும், எச்சரிக்கைகளையும் வைத்துக்கொண்டிருக்கிறாய்? நான் தங்குமிடம் உனக்குத் தெரியுமாதலால் நீ நேரிலேயேவந்து பேசி இருக்கலாமல்லவா? நீ இப்போது என்ன செய்யப்போகிறாய்? உன் திட்டங்களையெல்லாம் விவரமாகக் கூறிவிடு,'' என்று பரபரப்புடன் கேட்டான்.

அதற்கு அவள், "உன்னை நான் அதிகநேரம் இங்கே தங்கவைக்கமாட்டேன். நீ இதுவரை கூறியதையெல்லாம் நான் கவனத்துடன் கேட்டதேபோல் இனி நான் கூறுவதை நீ மிகக் கவனத்துடன் கேட்கவேண்டும். ஏனெனின் இவ்வுலகில் நாம் சந்திப்பது இதுவே கடைசிமுறையாகும். நீ என்னை ஒரு பெருந்தொல்லையாகக் கருதுகிறாயே யொழிய நான்மட்டும் பல வருஷங்களாகவே உன்னை மனப்பூர்வமாக நேசித்து வருகிறேன். நீ பலதொந்தரைகளை உண்டாக்கிய போதும் நான் மிகப்பொறுமையுடன் சகித்துவந்திருக்கிறேன் ஆனால் அதை மறந்துவிட்டு வேறு விஷயங்களைக் கவனிப்போம். நீ சமீபத்தில் ஒருநாள் இரவு உத்தம லட்சணங்களிற் சிறந்த கோமளவல்லியை, அவள் வீட்டினுள் நுழைந்து

இம்சைசெய்யவும், கற்பழிக்கவும் முயன்றதும் எனக்குத் தெரியாதென்று இருக்கிருயா? அன்று பயந்துகொண்டு ஓடி வந்தவன் இன்னமும் தலைமறைந்துகொண்டு திரிகிருய். ஏதேனும் ஆபத்து வருவதாயிருந்தால் வேறு தேசத்துக்கு ஓடிப் போகலாமென்று கருதியே துறைமுக நகரம் வந்துவிட்டிருக்கிருய். உன் உத்தேசங்களையெல்லாம் நான் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறேன் என்பது உனக்குத் தெரிகிறதா?'' என்று கேட்டாள்.

அதைக்கேட்ட அவன், மிக்க கோபத்துடன், "இப்போது அதைப்பற்றி என்ன? நீ உன் விஷயத்தைச் சொல். என் குதிரை இனியும் இங்கு அதிகநேரம் நிற்காது—ஜாக்கிரதை. விரைவில் சொல்லிவிடு,'' என்று அதட்டிக் கேட்டான்.

அதற்கு அம்மாது, "நான் உன்னை நீண்டநேரம் தங்க வைக்கமாட்டேன். நீ கந்தபுரிக்கு வந்து அங்கேயே வசிப்பதென முடிவுசெய்து ஓரிடத்தை வாடகைக்கு வாங்கிய பின்னர் நானும் உன்னைத் தேடிவந்து உன் அருகிலேயே தங்கியபோது இனி என் பந்துக்களை நான் பார்க்கமாட்டேன் என்று சபதம் செய்துகொண்டது உனக்குத் தெரியுமல்லவா? ஆனால் சொற்பகாலத்துக்குப் பின்னர் என் சகோதரிகளின் யோகக்ஷேமங்களைப்பற்றி விசாரித்தபோது மேனகை இறந்துவிட்டாளென்றும், அவளுடைய இரு புத்திரிகளாகிய கற்பகவல்லி, கோமளவல்லி ஆகியவர்களுடன் மற்றொரு சகோதரியாகிய கமலம் சுந்தரம்மாளென்னும் பெயரால் கந்தபுரிக் கருகிலேயே வசிப்பதாகவும் தெரிந்தது. ஆகவே அன்றுமுதல் என் சகோதரியின் புத்திரியாகிய கோமளத்தின் க்ஷேமத்தில் அதிக கவலைகொண்டேன். அதிலும் அயோக்கியத்தனத்தில் தலைசிறந்த நீ அவளைக்கெடுக்க முயற்சிக்கிருய் என்று

தெரிந்ததும் எப்படியாவது உன் தொல்லையினின்றும் அவ ளைக் காப்பது என்று உறுதி செய்துகொண்டேன், ஆகவே சுகானந்தமே! நீ உன் கேவல இச்சைக்காக என் சகோதரி யின் புத்திரியைக் கெடுத்துவிட்டிருப்பாயல்லவா? நான் தடையாக இருந்து உன் எண்ணம் நிறைவேறாம லிருக்கும் படி பார்த்துக்கொண்டிருக்கிறேன்,'' என்றாள்.

அப்போது அவன், தன் குதிரை நெடுநேரமாக ஒரே இடத்தில் நிற்கமுடியாமல் குதித்துக்கொண் டிருந்ததால் அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு அதிக ஆத்திரத்துடன், "நீங்களிருவரும் இவ்வாறு சமீப பந்துக்களென்று எனக்குத் தெரியாதல்லவா'' என்றான். அதற்கு அவள், 'ஆம்; உனக்குத் தெரியாது என்பது வாஸ்தவமே. ஆயினுந் தெரிந்திருந்தாலும் நீ அதையெல்லாம் கவனியாமல் உன் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு அவளைக் கெடுக்கவே முயன் றிருப்பாய். ஓ, அயோக்கியனே! நீ எதிர்காலத்தைப்பற்றிச் சிறிதும் சிந்தியாமல் அவ்வப்போது காணும் இன்பங்களி லேயே கவனம் செலுத்துபவன். ஆனால் பழி தீர்த்துக் கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது. நீ என்னை வெறுப் பதையும், அலட்சியம் செய்வதையும் நானும் வெகுகால மாகவே பொறுத்துவருகிறேன். உனக்காக நான் எவ்வளவோ கஷ்டநஷ்டங்களை அனுபவித்திருக்கிறேன். எவ்வளவோ தியாகம் செய்திருக்கிறேன். நான் முன்பு எவ்வளவு அதிக மாக உன்னை நேசித்தேனோ அவ்வளவு அதிகமாக இப்போது உன்னை வெறுக்கிறேன் என்பதையும், ஒருமாது வெறுக்க ஆரம்பித்துவிட்டால் அது எவ்வளவு தொல்லையாக முடியு மென்பதையும் நீ அறிந்துகொள்'' என்று கூறினாள்.

அதைக்கேட்ட சுகானந்த குரு, "லீலாவதி, உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டிருக்கிறது. ஆகையால் உன்னைத் தனியே விட்டு நான் போகவேண்டியதுதான்,'' என்று

கூறிக்கொண்டே மலையினின்றும் கீழே இறங்கும் உத்தேசத்துடன் குதிரையைத் திருப்பமுயன்றான். ஆனால் லீலாவதி உடனே ராக்ஷசியைப்போல் வேகமாகக் குதிரைமுன் நின்று, அது பின்பக்கமாகச் செல்லும்படி செய்தாள். ஆனால் குதிரை இரண்டடி பின்னால் செல்லுமாயின் மலை உச்சியிலிருந்து அதிக ஆழத்திலுள்ள பள்ளத்தில் விழவேண்டியதுதான். ஆகவே சுகானந்தன் மிக்க பீதியுடன், ஓவென்று கதறிக்கொண்டே குதிரையை அடக்க முயன்றான். எனினும் லீலாவதி, தன் கைகுட்டையை விரித்துக் குதிரைமுன் காட்டி அதைப் பயமுறுத்தவே அது திடீரென்று பின்பக்கமாக இரண்டடி சென்றதும் குதிரையும் அதன்மீதிருந்த மனிதனும் ஆழ்ந்த பள்ளத்தில் விழுந்து உயிர்துறந்தார்கள். லீலாவதி மலையின் உச்சியில் நின்று அவர்கள் விழுந்த இடத்தை நோக்கினாள். குதிரையும் மனிதனும் உயிரற்றுக் கிடப்பதைக் கண்டாள். சொற்பநேரத்தில் எல்லாம் நிசப்தமாய்விட்டது. லீலாவதி ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்டாள்.

பிறகு அவள் திரும்பிவந்தபோது எதிரில் சில ஆடவர்கள் வருவதைக்கண்டு பீதியடைந்தாள். எப்போதுமே குற்றம் செய்தவர்களுடைய முகமே, அவர்கள் உள்ளத்திலுள்ள பீதியை வெளிப்படுத்திவிடுமல்லவா? அவள் முகத்தைக் கண்டதுமே அவர்கள் ஏதோ செய்திருக்கிறாளென அவர்கள் தெரிந்துகொண்டு அவளை மிரட்டினார்கள். ஆகவே அவள் ஏதோ எதிர்பாராத சம்பவம் நேர்ந்துவிட்டதாகச் சமாதானம் கூறவே அனைவரும் வேறு வழியாகக் குதிரையும் மனிதனும் விழுந்த பள்ளத்தாக்கிற்குச் சென்று பார்த்ததில் இருவரும் உயிர் துறந்திருப்பதைக் கண்டார்கள். எனினும் அவர்கள் அம்மாதை விடாமல் போலீஸ் கோர்ட்டுக்கு வந்து

தகவல் அறிவித்துவிட்டுப் போகவேண்டுமெனக் கூறினர்கள். அவளும் அத்துறைமுக நகரத்தின் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று எதிர்பாராத சம்பவம் நேரிட்டுவிட்டதாகச் சமாதானத்துடன் சொல்லிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டாள்.

லீலாவதி பிறகு மன அமைதியற்றவளாய் அத்தேசத்திலேயே இருக்கப் பிரியமில்லாமல் தேசாந்திரம் புறப்பட்டுவிட்டாள். அவ்வாறு புறப்படுமுன் அவள் சுந்தரம்மாளென்னும் கமலத்துக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினுள்:—

"எனதன்புள்ள கமலம்! நான் இரத்தினபுரியை விட்டு கடைசி முறையாகப் புறப்பட்டுவிட்டேன். சுகானந்தனும் ஒழிந்தான். இனி அவன் தொல்லையே இராது. அவன் செய்த அக்கிரமங்களுக்கேற்ப ஒருவித கோரமான மரணத்தை அவன் அடைந்ததை நானே கண்ணுல் பார்த்தேன். அவனடைந்த மரணத்தைப்பற்றி நினைக்கும்போதே நெஞ்சம் திடுக்கிடுகிறது. தற்செயலாக நான் அதைப்பார்க்க நேர்ந்தது. அதைப்பற்றிய முழுவிவரத்தை நீ பத்திரிகைகளில் கண்டிருக்கலாம். என் மனம் மிகவும் குழப்ப மடைந்திருப்பதால் நான் எங்கே, எப்படி தங்கியிருப்பது என்பதுபற்றி ஒன்றும் தோன்றுமல் திகைக்கிறபடியால் தேசசஞ்சாரம் புறப்பட்டுவிட்டேன். எனினும் அப்போதைக் கப்போது நான் என் தகவலை உனக்கு அறிவித்துக்கொண் டிருப்பேன். இப்போதுள்ள நிலைமையில் நான் என் ஜீவனத்துக்கும் உன்னையே நம்பி யிருக்கவேண்டியிருப்பதால் அப்போதைக்கப்போது நான் தெரிவிக்கும் விலாசத்துக்கு ஏதேனும் சொற்ப தொகையை அனுப்பிக்கொண்டிருந்தால் என் தேவைகளை வாங்கிக்கொள்வேன். நீ ஏழையாக இருந்தால் நான் உன்னை

ஒன்றும் கேட்காமல் பிச்சையெடுத்தாவது ஜீவிப்பேன். ஆனால் இறைவனருளால் உனக்கு இப்போது பல வழிகளாலும் செல்வம் சேர்ந்திருப்பதால் இந்த உதவியை உன்னிடமிருந்து எதிர்பார்க்கிறேன். நாம் இனி சந்திக்கப்போவதில்லையென்றாலும், உன்னையும், உன் அன்பிற்குப் பாத்திரமானவர்களையும் நான் என்றென்றும் மறக்கவேமாட்டேன்.

உனது அன்புள்ள சகோதரி,
லீலாவதி''

இவ்வாறாக லீலாவதி தானே சுகானந்தனைக் கொன்றதை வெளியிடாமல் மறைத்துவிட்டாள். இதனால் லீலாவதியின் குடும்பத்தைச் சேர்ந்த எவருக்குமே லீலாவதி ஒரு கொலைகாரி என்னும் விஷயம் தெரியாமலேயே இருந்துவிட்டதால் அவர்கள் எத்தகைய கவலைப்படவேண்டிய அவசியமும் இல்லாமற்போயிற்று.

நேயர்காள்! பார்த்தீர்களா? மடாலயத்தில் இருந்து கொண்டு பாமர மக்களுக்கு ஆன்ம முன்னேற்றத்தைப்பற்றி உபதேசிக்கவேண்டிய குருவான சுகானந்தன் தன்னால் ஒரு காலத்தில் காதலிக்கப்பட்ட லீலாவதியின் கையாலேயே துர்மரணத்தையடைந்தான். அவனைப்போன்ற வேஷதாரிகளுக்கு அத்தகைய மனக்கவலையும் இறுதியில் துர்மரணமுமே நேரிடும் என்பதில் சந்தேகமில்லை. இப்போது நம் நாட்டிலும் இப்படிப்பட்ட வேஷதாரிகளான சந்நியாசிகளே அதிகரித்துவிட்டிருப்பதும் தேசத்தின் துர்ப்பாக்கியமேயாகும். அவர்கள் சோம்பேறித்தனத்திலும் ஒழுக்க ஹீனத்திலுமே தங்கள் வாழ்க்கையை நடத்திப் பாமரமக்களை ஏமாற்றுகின்றனர். அத்தகையோரால் நாட்டுக்கோ, மக்களுக்கோ எத்தகைய நன்மையுமில்லை. மடாதிபதிகள் என்போரும் சம்பிரதாயமான சடங்குகளைக் கவனிக்கின்றனரே யொழிய கால

தேச வர்த்தமானத்துக்கேற்ப மக்களையும், நாட்டையும் சரியான வழியில் திருத்த எத்தகைய முயற்சியும் செய்யாமல் தங்கள் கௌரவத்தையும், வரும்படியையும் காப்பாற்றிக் கொள்வதிலேயே முழு கவனத்தையும் செலுத்துகின்றனர். இதனால் ஜனசமூகம் பலவகைக் குற்றங் குறைகளுள்ள தாய்க் குழப்பமடைகின்றது. விரைவில் மடாதிபதிகளும், சந்நியாசிகளும் தங்கள் கடமையை உணர்ந்து வேலை செய்வார்களென்று நம்புகிறோம்.

மேலும் மாதர்கள் ஆடவர்களை மனமாரக் காதலிப்பது அரிது. அப்படி உண்மையில் ஒரு ஆடவனைக் காதலித்துவிடுவாளாயின் அவள் தன் காதலனுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்வாள். அன்றியும் அக்காதலனால் எப்படிப்பட்ட இடையூறுகளும், கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட்டபோதிலும் அவற்றைப் பொறுமையுடன் சகித்துக்கொள்வாள். ஆனால் துரதிர்ஷ்டவசமாகவோ, அல்லது காதலனின் கொடுமை காரணமாகவோ அவள் அன்பெல்லாம் வெறுப்பாக மாறி விடுமாயின் அந்த வெறுப்பும் எல்லையற்ற கடுமையானதாகி விடும். உடனே எவ்வகையாலேனும் பழிதீர்த்துக்கொண்டு விடுவர். கொலைசெய்யவும் அஞ்சார். ஆதலின் ஆடவர்கள் தங்களை உண்மையில் காதலிக்கும் மாதரின் மனம் கோணாத வாறு நடந்துகொண்டு பரஸ்பரம் அன்புடனும் உண்மையுடனும் வாழ்ந்தால் ஆயுட்காலம் முழுதும் அக்காதலரின் வாழ்க்கை இன்பமயமானதாயிருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. லீலாவதி, சுகானந்தன் வாழ்க்கையினால் நாம் இவ்வுண்மையை அறிகின்றோம். நமது மாதர்கள் எக்காலத்திலும் எக்காரணத்தைக்கொண்டும் கொலைக்குற்றங்களுக்குக் காரணமாக இருக்கக்கூடாதென்பதே எமது அவா. ஏனெனின் பெண்மணிகளுக்கே தாய்மை என்னும் உயரிய பதவி

கிடைக்கக் கூடியதாய் இருக்கின்றது. ஆதலின் அவர்கள் உயிர்களைத் தோற்றுவித்து அவற்றைக் கண்ணுங் கருத்துமாகக் காப்பாற்றவேண்டுமே யொழிய அழிக்கக் காரணமாயிருக்கக்கூடாது. இவ்வுண்மையை நமது நாட்டு மாதர்கள் கவனிப்பார்களாக. ஆடவர்களும் மாதர்களுக்குத் துரோகம் செய்யாமலும் இழிவாக நடத்தாமலும் அன்புடனும் சமத்துவமாக நடத்தி இன்புறுவாராக.

174 - வது அத்தியாயம்

இரத்தினபுரிக்கு வெளியிலுள்ள ஒரு ஊரில் கட்டப்பட்ட இராணியின் மாளிகையில் இராணியினுடைய தோழியாக வேலை பார்த்துவரும் ஜயதேவியும் அவள் குமாரி பத்மாட்சியும் எவ்வாறு தங்கள் காலத்தைக் கழிக்கிறார்கள் என்பதுபற்றி நாம் இப்போது கவனிப்போம். ஏனெனின் பத்மாட்சி என்னும் அக்கன்னிகை தன் தாயின் நிர்ப்பந்தத்துக்கும் கட்டாயத்துக்கும் உட்பட்டு, காமவிகாரத்தில் தலைசிறந்த இளவரசனுக்குத் தன் மானத்தை விற்றுவிட்டபடியால் பின்னர் அவளது கதி யாதாகிறது என்பதை அறிய வேண்டியது அவசியமாகும். அவள் அவ்வாறு இளவரசர் இச்சையைப் பூர்த்திசெய்து நாம் கூறும் தினத்துக்குச் சுமார் ஐந்து மாதங்களுக்குமேலாகிறது. ஒருநாள் காலை எட்டு மணிக்கு பத்மாட்சி தனது படுக்கையறையில் தன் படுக்கையில் உட்கார்ந்த வண்ணம் சமீபத்திலுள்ள ஜன்னலின் வழியே அடுத்துள்ள மைதானத்தை நோக்கிக்கொண்டே ஏதோ தீவிர சிந்தனையிலிருந்தாள். அவள் அப்போதுதான் படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்திருந்தபடியால் அவளது விலையுயர்ந்த ஆடைகளெல்லாம் சிறிது கலைந்துபோய்,

அவளை அச்சமயத்தில் காணும் ஆடவனுக்குக் காமவிகாரம் உண்டாகும்படியாக அவளது அங்கங்கள் உபாயமாகத் தெரிந்துகொண்டிருந்தன. அவள் ஏதோ ஆழ்ந்தசிந்தனையில் இருந்ததால் தன் ஆடைகள் சொற்பம் கலைந்திருக்கின்றன என்பதும் அவளுக்குத் தெரியவில்லை. நாம் முன்னமே கூறியிருப்பதுபோல் அவள், மதனவல்லி, தெய்வயானை முதலியவர்களைவிட ரூபலாவண்யமுள்ளவளல்லவென்றாலும் அப்போதுதான் நல்ல பிராயமடைந்திருந்தபடியால் அவளது மார்புபோன்ற உறுப்புக்களெல்லாம் நன்கு உருப்பெற்றிருந்தபடியாலும், கண், மூக்கு முதலிய சாதாரண அங்கங்களும் அழகாயிருந்தபடியாலும் அவள் வசீகரத் தோற்றமுடையவளாய் இருந்தாள் என்பதை மறுக்கமுடியாது. மேலும் அவளுக்கு அப்போதுதான் வயது இருபத்து ஆறு. இளவாசர் எப்போதுமே 25-அல்லது 26-வயது மாதர்களின் இன்பத்தை அனுபவிப்பதிலேயே அதிகப் பிரியமுள்ளவர். ஆகவே இளவாசர் தன் தாயாரைக் காணச்சென்ற இடத்தில் பத்மாட்சியைக் கண்டு மோகித்து அன்றிரவு அங்கேயே தங்கி, அவள் தாயின் உதவியால் தமது இச்சையைப் பூர்த்தி செய்துகொண்டார்.

இவ்வாறு இளவாசர் இச்சையைப் பூர்த்திசெய்த பத்மாட்சி, பெயரளவில் கன்னிகையாக இருந்தாள். அவள் அச்சம்பவம் நிகழ்ந்த ஐந்துமாதங்களுக்குப் பிறகு ஒருநாள் காலை நாம் மேலேகூறியவாறு ஆழ்ந்த சிந்தனையில் இருந்தபோது அவ்வறையின் கதவைத் திறந்துகொண்டு அவளுடைய தாயார் ஜயதேவி உள்ளே நுழைந்தாள். பத்மாட்சி ஏன் அவ்வாறு துயரத்துடன் இருந்தாள் என்னும் சந்தேகம் சகஜமாக நேயர்களுக்கு உண்டாகலாம். அவள் ஏன் இளவாசரின் இச்சைக்கு இணங்கினோம் என்று மனம் வருந்தி

யிருப்பாளென்று நினைக்கிறீர்களா? அல்லது இளவரசன் தான், அவள் மனம் திருப்தியடையும்படி பின்னர் நடந்து கொள்ளாமல் தன் வேலை முடிந்துவிட்டதென்று அவள் விஷயத்தில் அலட்சியமாய் இருந்து அதனால் அவள் வருத் தப்படுகிறாளா? அல்ல, அல்ல. இக்காரணங்களால் அவள் துக்கப்படவில்லை. ஆனால் அவளுக்கு வேறு ஒரு விஷயம் அளவிலா வருத்தத்தை உண்டாக்கியது.

அவ்வறையில் நுழைந்த அவளது தாயார் அவளைக் கண்டு, "எனதன்புள்ள குழந்தாய்! ஏன் இவ்வாறு ஏதோ கலக்கத்துடன் உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டாள். உடனே பத்மாட்சி தன் ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு எழுந்துநின்று, "தாயே! நீ இவ்வாறு கேள்வி கேட்கலாமோ? என் கலக்கத்தைத் தீர்ப்பதற்கு நீயல்லவோ பரிகாரம் தேட வேண்டும். அதைவிட்டு ஒன்றும் தெரியாதவள்போல் ஏதோ புதிதாகக் கேட்கிறாயே" என்று கூறினாள்.

தாயார்:—ஓ, அப்படியானால் உன் நிலைமையைப்பற்றிச் சந்தேகமில்லாமல் உண்மை தெரிந்துவிட்டதுபோலும்!

மகள்:—சந்தேகமா? என்ன? நான் இப்போது நான்குமாத கருப்பிணி என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. எனக்குக் குழந்தை பிறந்துவிட்டால் அது யாருடைய குழந்தை என்று உலகில் பெயர்பெறும் என்பதை விவரித்துக் கூறு.

தாயார்:—என்ன? நீ பேசுவது ஆச்சரியமாய் இருக்கிறதே. இளவரசருடைய மோகத்தில் ஈடுபட்ட கன்னிகை நீ ஒருத்திதான் என்று நினைக்கிறாயா? நீ யாரையேனும் சாதாரண மனிதனை விவாகம் செய்துகொண்டிருந்து உனக்குக் குழந்தை பெறுமாயின் அதற்கு எளியபெயர் தான் கிடைக்கும். ஆனால் இப்போது இளவரசர் தன்

முயற்சியால் உனக்கொரு பிரபுவைத்தேடி மணம் முடித்துவிடுவார். அப்போது உன் குழந்தை பிரபு அல்லது ஸ்ரீமதி என்னும் பெயரையடையும், இளவரசரின் தயவைநாடி எத்தனையோ பிரபுக்கள் காத்திருக்கின்றனர்.

மகள்:—தாயே! நீ முதன்முதலில் இளவரசரின் காமத்துக்கு நான் இரையாகவேண்டுமென நீ கூறியபோதே நான் உன்னை வெறுத்தேன். மேலும் இம்பாதிரி காரியங்களால் உன்னிடம் எனக்கு நாளுக்குநாள் வெறுப்பு அதிகரிக்குமென்றும் எச்சரிக்கை செய்திருக்கிறேன். இப்போதுதான் எனக்கு எல்லையற்ற வெறுப்பும் ஆத்திரமும் ஏற்பட்டிருக்கிறது. அதிலும் பிரவேசித்தபோது இருந்ததைவிட இப்போது நீ பேசிய பேச்சுகளைக் கேட்டபின்னர் வெறுப்பு அதிகரித்துவிட்டது. ஏன் உனக்கு இத்தகைய மனோராஜ்யங்கள் தோன்றுகின்றன?

தாயார்:—மகளே! நான் கூறுவதெல்லாம் மனோராஜ்யமென்று நினைக்கிறாய்? உண்மையையே கூறுகிறேன்.

மகள்:—சரி, உன் வார்த்தைகளெல்லாம் உண்மை என்றே வைத்துக்கொண்டாலும் நான் சாதாரணமாக எளியவனைக் கலியாணம் செய்துகொண்டு ஒரு குழந்தை பிறக்குமாயின் அக்குழந்தைக்கு அவமானமும் அபகீர்த்தியும் இராது. மேலும் அந்தக் குழந்தையின் உண்மையான தந்தையாகிய அவன் அதனிடம் எவ்வளவோ பட்சத்துடன் இருப்பானல்லவா?

தாயார்:—நீ பதினேழு அல்லது பதினெட்டு வயதுடைய பெண்ணாயிருந்து உன்னை யாரேனும் ஒரு அநாமதேயன்

பலாத்காரமாகக் கெடுத்துவிட்டிருந்தால் இப்போது நீ கூறியபடியெல்லாம் சிந்திக்கவேண்டும். ஆனால் இருபத்தாறு வயதானவளும், இளவரசரின் காதலுக்கு ஆளானவளுமான நீ இவ்வாறு பேசுவது சிறிதும் சரியல்ல.

மகள்:—காதலா! இளவரசருக்கு என்மீது காதல் என்று நினைக்கிறாய்? அழகும் யௌவனமும் வசீகரமும் வாய்ந்த பெண்கள் யாராயினும் அவர்களை எப்படியாவது அவனுடைய அதிகாரத்தையும் செல்வாக்கையும் உபயோகித்துக் கெடுத்துவிட்டு மகிழ்ச்சியடையும் அவனா என் காதலன் என்று நீ நினைக்கிறாய்?

தாயார்:—பத்மாட்சி! நீ மனதில் ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு இவ்வாறெல்லாம் பேசிவருகிறாய். அது என்ன என்று எனக்குத் தெரியவில்லை. உனக்குப் புதிதாக ஏதேனும் அசந்தர்ப்பம் நேர்ந்துவிட்டதா? என்ன சங்கதி? எதையும் விவரமாகச் சொல்.

மகள்:—தாயே! நான் சொல்வதைக் கேள். அதோ அந்த நாற்காலியில் உட்காரு. நேற்று மாலை இளவரசர் ரத்தினபுரியிலிருந்து இம்மாளிகைக்கு வந்திருந்தார். அவர் மகாராஜாவுடன் சில முக்கியமான விஷயங்களைப்பற்றி யோசிக்க வந்தார்போலும்!

தாயார்:—ஆமாம்! அது எனக்கும் தெரியும். அவர் நேற்று இரவு முழுதும் இங்கே இருந்து உன்னுடன் இன்பம் அனுபவிக்காமலோ அல்லது அரைமணி நேரமாவது இனிமையாகப் பேசாமலோ உடனே இரத்தினபுரிக்குத் திரும்பிவிட்டதற்காக உனக்கு மனவருத்தம் ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

மகள்:—ஓ, தாயே! நீ நினைப்பது தவறு. உனக்கு விஷய மொன்றும் தெரியாது. இளவரசர் நேற்று மாலை வந்திருந்தபோது என்னைத் தனியாகச் சந்தித்து அரை மணி நேரம்வரை பேசினர். நாங்களிருவரும் நேற்றிரவு பேசியதன் முடிவின்பயனுகவே இன்று நான் இவ்வளவு கவலையுடன் இருக்கிறேன். பூரா விவரமும் அறியவேண்டுமானுல் தடையில்லை.

தாயார்:—அவசியம் சொல்லித்தான் ஆகவேண்டும். பூரா விவரங்களையும் நான் அறியவேண்டாமா? இளவரசனுக்கும் உனக்குமிடையில் ஏதோ தகாறு ஏற்பட்டிருக்கிறதுபோலும், உடனே விவரம் கூறு.

மகள்:—தாயே! நான் முதன்முதலில் இளவரசர் மோகத்துக்குட்பட வேண்டுமென்று நீ வற்புறுத்தியபோதே நான் மிகவும் கஷ்டப்பட்டேன். ஆனுல் நீ ஏதோ தாங்க முடியாத கடனில் சிக்கிக்கொண்டிருப்பதாகச் சொன்னதால் உன் நிலைமையை யொட்டியே உன் தூண்டுதலுக்கு இசைந்தேன். ஆனுல் பிறகு விசாரித்ததில் நீ கடன் என்று சொன்னதெல்லாம் பொய் என்று தெரிந்துவிட்டது. நான் ஒருமுறை என் கற்பை இழந்துவிட்டதால் பின்னர் அதைப்பற்றி லட்சியம்செய்யாமல் எனக்கும்உண்டான காம யிச்சையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக இளவரசர் வந்தபோதெல்லாம் அவருடன் இன்பம் அனுபவித்துவந்தேன். அவரும் பலசன்மானங்களைச் செய்ததுடன் இன்னும் பலவாறுகவெல்லாம் உதவிசெய்வதாக வாக்குறுதியளித்தார். நாலைந்து வாரங்களுக்குமுன் அவர் இங்கே வந்திருந்தபோது எங்களுடைய கூட்டுறவால் பகிரங்கபலன் ஏற்பட்டு வருவதை அவருக்குக் குறிப்பாக அறிவித்தேன். ஆனுல்

அவர் அவ்விஷயத்தில் சிரத்தை காட்டவில்லை. அவர் இவ்விஷயத்தை அசிரத்தையுடன் கேட்டதால் எனக்குத் துக்கமும் அச்சமும் அதிகரித்துவிட்டது. இருந்தாலும் அதைப்பற்றி அதிகம் வருத்தப்படாமலும், உனக்கும் தெரிவிக்காமலும் இருந்துவிட்டேன். ஆனல் அவர் மறுபடியும் நேற்று வந்தபோது அவர் இங்கிருந்து புறப்படுவதற்குமுன் அவரைச் சந்தித்து நான் ஒரு மாதத்துக்குமுன் அவரிடம் தெரிவித்த விஷயம் உண்மையாய்விட்டதென்று எச்சரிக்கை செய்தேன். ஆனல், தாயே! நான் என்னசொல்வேன். அவர் என்னிடம் அலட்சியமாயிராமல் அச்சங்கதியைக் கவனத்துடன் கேட்பார் என்று நம்பினேன். ஆனல் அவர் இவ்விஷயத்தில் காட்டிய அசிரத்தையையும், ஏன்? அலட்சியத்தையும் பார்த்தால்—என்று கூறிக்கொண்டே கண்ணீர்விட்டு அழுதாள்.

தாயார்:—எனது குழந்தாய்! நானும் இவ்வாறு நடக்குமென்று இதுவரை எதிர்பார்க்கவில்லை. இப்போது நீ சொல்லும் விஷயத்தைக் கேட்டால் எனக்கே திகிலாயிருக்கிறது.

மகள்:—தாயே! அப்படியல்ல. நீ இதுவரை என்ன நினைத்து வந்தாய் என்பது எனக்குத் தெரியும். இளவரசர் எனக்கும், எனக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்கும் வேண்டிய சௌகரியங்கள் அளித்து நல்ல அந்தஸ்தில் வைப்பாரென்றும், இதனல் எனக்கேற்பட்டுள்ள அவமானம் மறைந்துவிடுமென்றும், மதனவல்லியை அவர் நடத்தியதுபோலவே எனக்கும் நிறைய பென்ஷனும், பிரபுப் பட்டமும் இதாநன்மைகளும் அளிப்பார் என்றும் நம்பியிருந்தாய். நான் இவ்வளவு ஆடம்பரங்களுடன் ராஜ

மாளிகையில் வசித்துவந்தால் யாரேனும் ஒரு பிரபு என்பால் மோகங்கொண்டு என்னை மணந்துகொள்வா ரென்றும் நினைத்தாய். இக்கனவுகளை நீ கண்டதால் தான் அந்த இன்பங்களை அனுபவிப்பதற்காக இத் தகைய சூழ்ச்சிகளையெல்லாம் செய்து என்னையும் கற்பு நெறியினின்றும் தவறும்படி செய்தாய்.

தாயார்:—ஆம், மகளே! நீ கூறுவதுதான் சரி, ஆனால் என் நம்பிக்கைகளெல்லாம் பாழாகப் போகுமென்றுமட்டும் என்னிடம் சொல்லாதே.

மகள்:—நீ சொல்லாதே என்று கூறினால் எப்படி முடியும்? நம்பிக்கைகளெல்லாம் பாழாகத்தான் போயின. இள வரசர் நமது இஷ்டப்படி நடக்கும்படி செய்ய என் னிடம் சக்தி இல்லை. அவர் என்விஷயத்தில் மிக அலட் சியமாக இருக்கிறார். ஏதோ விளையாட்டு பொம்மை யைப்போலத் தான் அவர் என்னைக் கருதுகிறார். அவர் நேற்று என்னுடன் சிறிதுநேரம் பேசியதிலிருந்து விஷ யம் நன்றாகத் தெரிந்துவிட்டது.

தாயார்:—அப்படியா? அந்த நன்றி கெட்ட மனிதர் அப் படியா செய்தார். ஐயோ, எனக்குத் துக்கமாக இருக் கிறதே. எனினும் எனது மகளே! ஒருவகையில் நாம் ஆறுதலடைய வேண்டியதுதான். அவர் மதனவல் லியை இழந்துவிட்டதால் மிகக் கவலையுடன் இருக் கிறார். ஆகவே இங்கு வரும்போது அவர் ஏதேனும் வெறுப்புடன் இருந்திருக்கலாம்.

மகள்:—ஆம்; அவர் மதனவல்லியை அன்புடன் நேசிப்பத னாலும், அவளிடத்திலேயே அதிக ஆர்வமுடையவராய் இருத்தலாலும் அவர் மனமெல்லாம் அவளிடமே

18563
சென்னை-600 005

பதிந்துவிட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது அவர் பிறமாதர்களைக் காமவிகார உணர்ச்சிகளை அடக்கமுடியாமல் கெடுத்துவிடுகிறார். அப் பிற மாதர்களிடம் அவருக்குப் பூரணமான அன்போ, ஆதாவோ இருப்பதில்லை. ஆதலாலேயே அவருக்கு என்னிடம் அன்பில்லை என்று நான் கூறுகிறேன்.

தாயார்:—அதிருக்கட்டும். நேற்றுமாலை அவர் உன்னிடம் எவ்வாறு நடந்துகொண்டார்? என்ன கூறினார் என்பதை விவரமாகச் சொல்லவும்.

மகள்:—தாயே! அந்த விவரங்களையெல்லாம் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. நான் அவரிடம் என் நிலைமையைத் தெரிவித்து எனக்குத் தக்கயோசனை கூறும்படி கேட்டுக்கொண்டபோது அவர் மிக அலட்சியமாக, பிரசவகாலத்தில் நான் எப்படியாவது சாமர்த்தியமாகச் சமாளித்துக் கொள்ளவேண்டுமென்றும், இங்கிருந்து ரஜா வாங்கிக்கொண்டுபோய் ஏதேனும் மறைவான இடத்திலிருந்து காரியத்தை முடித்துக் கொண்டு வந்துவிட வேண்டுமென்றும் அதற்காக வேண்டுமாயின் சில நூறு பவுன்கள் வேண்டுமாயின் கொடுப்பதாயும் கூறினார். பார்த்தாயா தாயே! அவரை நம்பியதன் பலன் கைமேல் கிடைத்துவிட்டது. இப்போது உன்னுடைய நம்பிக்கைகளும், ஆசைகளும் என்ன ஆயிற்று?

தாயார்:—மகளே! நான் எல்லையற்ற துக்கத்தையடைகின்றேன். இளவரசர் நடந்துகொண்ட மாதிரி மிகக் கொடுமையாகவும், ஈவிரக்கமற்றதாகவும் இருக்கின்றது. தாராளநோக்கம், கௌரவம் ஆகிய விஷயங்களில் நான்

எப்போதுமே அவரிடம் மதிப்புவைத்ததில்லை. எனினும் இவ்வாறு மிருகம்போல் நடந்துகொள்வாரென்று நான் கனவிலும் நினைத்ததில்லை.

மகள்:—தாயே! என்னைக் கேவலம் ஒரு காமாதுரனுக்கு நீ விற்றுவிட்டாய் என்பதை இப்போதேனும் உணர்ந் தாயா? நான் ஒரு எளியவனையேனும் மணந்துகொண்டு அவனது மனைவியாக இருந்தால் எவ்வளவோ கௌரவ மாக இருந்திருக்குமே. இப்போது நாமாக இப்படிப் பட்ட கேவல நிலைமையைச் சம்பாதித்துக்கொண்டு விட் டோம்.

தாயார்:—பெண்ணே! இவ்வாறு நீயாக குறைகூறிக்கொண்டு விடாதே. எல்லாம் நீ நினைக்கிறபடி தீமையாகவே கடைசிவரையும் இராது. நீ கருப்பவதியென்று பலருக் கும் தெரியும்படியான நிலைமை ஏற்படுவதற்கு இன்னும் சிலமாதங்கள் செல்லும். இதற்குள் இளவரசரின் மனம் மாறுபட்டுவிடலாம். இனி மதனவல்லி திரும்பிவர மாட்டாள் என்று அவர் அறிந்துகொண்டுவிட்டால் பின்னர் உன்னையே மதனவல்லியை நேசித்ததுபோல் நேசிக்கவும், ஆதரிக்கவும் ஆரம்பித்துவிடுவார். ஆதலின் நீ அவசரப்படாமல் விரைவில் நற்காலம் வருமென நம்பி இரு.

மகள்:—அம்மா! அப்படி நினைக்காதே. அவர் மதனவல் லியை மறந்துவிடுவதாயின் பின்னர் அவளைப்போன்ற ஒரு ரூபலாவண்யமுள்ள வேறொருமாதை அவர் நேசிக்க ஆரம்பிப்பாரேயொழிய என்னை நேசிப்பா ரென்று நான் நினைக்கவேயில்லை.

தாயார்:—மகளே. நீயாக ஏன் நம்பிக்கையை இழக்குவிடு கின்றாய்? இனி நாம் என்னசெய்ய வேண்டுமென்பது

பற்றியே [யோசிக்கவேண்டும். நீ மதனவல்லியைப் போல் அவ்வளவு அழகுடையவளென்று நான் ஒரு நிமிஷமும் கருதியதில்லை. ஆயினும் நீயும் தக்கபடி அழ குள்ளவளே என்பதை எவரும் மறுக்கமுடியாது. உன் வசீகரத்தன்மையை இளவரசர் அலட்சியம் செய்து விடமுடியாது. ஆனால் நீ சரியாக உன் கடமையைச் செய்யவில்லையென்றே நான் நினைக்கின்றேன். அவரை இழுக்கும் வகையில் நீ உன் முழுச்சக்தியையும் உப யோகிக்காமல் இருந்திருக்கலாம். நீ சாகசங்களை யெல் லாம் செய்து அவரை வசீகரிக்காமல் அசட்டுத்தன மாக நடந்துகொண்டு விட்டாயோயென்று நான் சந் தேகிக்கிறேன்.

மகள்:—தாயே! அவ்வாறு நினைத்துவிடாதே. எப்போது கற்புநெறியினின்றும் தவறுவதென்று ஏற்பட்டு விட் டதோ அப்போதே நான் இனி லஜ்ஜையடைவதில் பய னில்லையென முடிவுசெய்து இளவரசர் மனப்பூர்த்தி யாகத் திருப்தியடையும்படி நடந்துகொண்டேன். மேலும் எனக்கே தக்க பிராயம் வந்துவிட்டதாலும் அந் தக் காமவிகார உணர்ச்சி ஏற்பட்டிருந்ததாலும் ஒரு முறை ஆடவருடன் சம்பந்தப்பட்டதும் மேலுமேலும் அவ்விஷய சுகத்தில் அதிக ஆசை உண்டாகிவிட்டதால் நானாக இளவரசரிடம் சரணமடைந்து என்னிடமிருந்து முழு இன்பத்தையும் அவர் அனுபவிக்கும்படி சாச சல் லாபமாகவெல்லாம் நடந்துகொண்டேன். இவ்வளவு செய்தும் பயனில்லாது போயிற்று. அம்மா! நீ இன் னும் உன்னை வீணாக ஏமாற்றிக்கொள்கிறாய். வீண் நம் பிக்கைகளையெல்லாம் வைத்துக்கொண்டு அலையாதே. இளவரசரிடமிருந்து இனி நாம் ஒன்றுமே எதிர் பார்க்க

முடியாது. நான் பகிஷ்கரிக்கப்பட்டவளானேன். என் கதி மிகவும் கேவலமானதுதான்.

இவ்வாறு கூறும்போது பத்மாட்சி மிகவும் மனமுடைந்தவளாய்த் துக்கத்துடன் கண்ணீர் வடித்தவண்ணம் தலையைக் கீழே தொங்கவிட்டுக்கொண்டு நின்றாள். இதைக்கண்ட அவள் தாயார் ஜெயதேவி ஒன்றும் சொல்லத் தோன்றாதவளாய் "ஆ, நம்முடைய நிலைமை மிக ஆபாசமானதுதான்" என்று தன்னையும் அறியாமல் வாய்விட்டுக்கூறினாள்.

மகள்:—தாயே! ஆபாசமென்று மட்டுமோ நினைக்கிறாய்? மிக ஆபத்தான நிலைமையில் இப்போது நான் இருக்கிறேன். எனக்கும் இளவரசருக்கு மிடையில் ஏதோ சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்பதைப் பலரும் அறிந்திருக்கிறார்கள். இளவரசர் என்னை மதித்து என்பால் நேசமாக இருக்கிறார் என்று தெரியும் வரையில்தான் இராணியார் உள்பட அனைவருமே என் இரகசியத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமல் என்னிடமும் கௌரவமாக நடந்து கொள்வார்கள். ஆனால் அவர் என்னை அலட்சியம் செய்துவிட்டார் என்பதை அவர்கள் அறிந்தால் அன்று முதல் வேலைக்காரி உள்பட அனைவருமே என்னை ஏளனமாகவும் கேவலமாகவும் கருதுவர். இதுமட்டுமல்ல, நான் ரஜாபெற்றுக்கொண்டு வெளியே எங்கேனும் தனியாகப்போவதற்கு முன்பே நான் கருப்பவதி என்பது யாருக்காவது தெரிந்துவிட்டால் உடனே என்னை இம் மாளிகையினின்றும் துரத்திவிடமாட்டார்களா? இதனால் உனக்குமல்லவா கஷ்டம் ஏற்படும். பிறகு நம்முடைய கதி யாதாகும்! நாம் ஏழையாக இருந்தாலும் நல்ல குணமுடையவர்களாக இருந்தால் நம்மை யாரேனும் அழைத்து வேலைக்கு வைத்துக்கொள்வார்கள்.

எத்தனையோபேர் நம்முடன் சிநேகமாவார்கள். எங்கே யாவதுபோய் எப்படியாவது பிழைத்துவிடலாம். ஆனால் இப்போது நம்முடைய பெயரோ கெட்டுவிட்டதே. என்னசெய்வது? நம்மை யாருமே மதிக்கமாட்டார்க ளல்லவா?

பத்மாட்சி மேல்கண்டவாறு கூறியபோது அவள் தாயாராகிய ஜயதேவி அவள் கூறியதைக் கேட்காமல் ஏதோ ஆழ்ந்தசிந்தனையில் இருந்தாள். பல விஷயங்களைப் பற்றி ஆலோசித்தாள். சிறிதுநேரத்துக்குள் ஏதேதோ யோசனை களையும் திட்டங்களையும் போட்டுப்பார்த்தாள். ஆகவே பத் மாட்சி பேசிமுடிந்ததும் ஜயதேவி வாய்திறக்கவில்லை. பழைய படி சிந்தனையிலேயே இருந்தாள். மகளும் பேசவில்லை. எனவே சொற்பநேரம் இருவரும் பேசாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

சிறிதுநேரத்துக்குப் பிறகு திடீரென்று ஜெயதேவி பேச ஆரம்பித்து, "மகளே! அஞ்சவேண்டாம். நான் ஒரு வழி கண்டுபிடித்துவிட்டேன். எப்படியாவது செய்து இளவா சர் மீண்டும் உன்பால் அன்புகாட்டி உனக்கு ஏதேனும் தக்க உதவிசெய்யும்படி ஏற்பாடு செய்கிறேன் பார்" என்று கூறினாள். அதற்கு அப்பெண், "அம்மா! நாம் கௌரவத் துடன் இம்மாளிகையில் வசிக்கும்படி ஏதேனும் ஏற்பாடு செய்வதுதான் நலம். எனக்கு அவமானம் வாராதபடி எப் படியாவது காப்பாற்றிவிடு. நீ என்ன ஏற்பாடு செய்யப் போகிறாயென்பதை அறிய ஆவலுள்ளவளாக இருக்கிறேன்" என்று மிக்க பரபரப்புடன் கூறினாள்.

அதற்கு அவளுடைய தாயார், "என் ஏற்பாடுகளைப் பற்றியெல்லாம் ஒன்றும் கேட்காதே. கவலையில்லாமல் அவ் வேலையை என்னிடம் விட்டுவிடு. நான் இனி பேசுவதில்

பயனில்லை. வேலையைச்செய்து காட்டவேண்டும். நீ சந்தோஷத்துடன் இரு. இளவரசரை வழிக்குக் கொண்டுவர முடியுமென்றும், நமக்கு வேண்டியதை அவரிடமிருந்து பெறமுடியுமென்றும் நான் நிச்சயமாக நம்புகின்றேன். நான் இப்போது நேராக இரத்தினபுரிக்கே போகப்போகிறேன்,'' என்று கூறிக்கொண்டே அவள் உட்கார்ந்திருந்த ஆசனத்திலிருந்து எழுந்தாள்.

தன் தாயார் மிக நம்பிக்கையுடன் பேசிய பேச்சுகளிலிருந்து பத்மாட்சியும் சிறிது ஆறுதலடைந்ததுடன் மீண்டும் நல்லகாலம் பிறக்குமோ என்று நினைத்து மகிழ்ச்சியடைந்தாள். ஜயதேவியும் வேறு ஒன்றும் கூறாமல் தன் மகளிடம் மற்றொருமுறை சந்தோஷத்துடன் இருக்கும்படி சொல்லிவிட்டு அவ்வறையைவிட்டுப் புறப்பட்டாள்.

உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்கள், எப்போதுமே தங்களைப்போன்ற அந்தஸ்திலுள்ளவர்களுடனேயே எத்தகைய சம்பந்தத்தையும் வைத்துக்கொள்ள விரும்புவர். ஆனால் தப்பித்தவறி ஏதேனும் தவறான முறையிலேனும் தாழ்ந்தவர்களுடன் சம்பந்தம் ஏற்பட்டால் அதை ரகசியமாக வைத்துக்கொள்ள முயல்வதுடன் அலட்சியமாகவும் கருதுவர். ஆதலின் தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்கள் எப்படிப்பட்ட ஆசைமொழிகளுக்கும் உட்பட்டு உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்களுடன் எத்தகைய சம்பந்தத்தையும் வைத்துக்கொள்ளாமல் தங்களைப்போன்ற எளியவர்களுடனேயே எதையும் வைத்துக்கொள்ளவேண்டும் என்பது இளவரசர், பத்மாட்சி சம்பந்தத்தால் நன்கு விளங்குகிறது.

175 - வது அத்தியாயம்

பத்மாட்சிக்கும் அவளது தாயாருக்கும் முன் அத்தியாயத்தில் கண்டபடி சம்பாஷணை நடந்த தினத்தின் பகலில் சுமார் நான்குமணிக்கு இளவரசர், இரத்தினபுரியிலுள்ள தனது மாளிகையில் தனியாக ஒரு அறையில் உட்கார்ந்து கடந்துபோன பல விஷயங்களைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தார். அன்று காலையில் அவர் பல மந்திரிகளுக்கும் மற்றும் பிரமுகர்களுக்கும் பேட்டிகொடுத்துப் பேசிக் களைப்படைந்திருந்ததால் நன்முகப் பழ ரசங்களை அருந்திவிட்டு உட்கார்ந்திருக்கிறார். அவர் அடிக்கடி தனியாக, "ஐயோ, எனது அன்புக்குகந்த மதனவல்லி இங்கு இல்லையே" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தார். இவ்வாறிருக்கும்போது ஒருசமயம் அவளது ஞாபகம் அதிகரித்துவிட்டபடியால் அப்படியே ஒரு சோபாவில் சாய்ந்து தனக்கும் தெரியாமல் பின்வருமாறு வாய்விட்டுக் கூறினர்:—

"மதனவல்லி என்னைப் பகிஷ்கரித்துவிட்டுப் போய்விட்டாள். அவள் இனித் திரும்பிவருவாளென நான் நினைக்கவேயில்லை. அவளுடைய கணவனும் என்னைவிட்டு அவளுடன் சேர்ந்து வாழப் போய்விட்டான். ஆகவே இனி நான் அவளை இழந்துவிட்ட மாதிரிதான். கூடியவரை மதனவல்லியைப் போலவே அழகிற் சிறந்தவளும், ரூபலாவண்யமுள்ளவளுமான தெய்வயானையோ இறந்துவிட்டாள். நான் மதனவல்லியிடம் இன்பம் அனுபவித்ததுபோல் வேறு எந்த மாதினிடமும் அனுபவித்ததில்லை. அதுபோலவே நான் அவளுக்குக் கொடுத்ததுபோல வேறு எந்த மாதுக்கும் கொடுத்ததில்லை."

இளவரசர் மிக்க கவலையுடன் இருந்ததால் எவ்வளவு மதுவருந்தியும் அவருக்கு உற்சாகமுண்டாகவில்லை. ஆகவே அவர் ஏதேனும் உற்சாகமான பேச்சுகளைத் தன்னுடன் பேசித் தனக்கு உற்சாகத்தை அளிக்கின்ற நண்பர் எவரேனும் உடன் இருந்தால் நன்றாயிருக்குமென நினைத்தார். யாரை வரவழைப்பது என்று யோசித்துக்கொண்டிருந்த போது ஒரு சேவகன் அங்குவந்து கபூர் கிருஷ்ணன் வந்திருப்பதாயும், இளவரசரைக் காணவிரும்புவதாகவும் அறிவித்தான். உடனே இளவரசரும் அவனை அனுப்பும்படி அனுமதி கொடுத்தார். சேவகனும் உடனே கபூர் கிருஷ்ணனை உள்ளே அனுப்பிவிட்டுத் தன்வேலையைக் கவனிக்கச் சென்றான். கபூர் அறையில் நுழைந்ததும் இளவரசர் அவனை வரவேற்று ஒரு ஆசனத்தில் அமரும்படியும் மதுபானம் அருந்தும்படியும் கூறினார். கபூர் கிருஷ்ணனுக்கோ மது என்றால் பரமானந்தம். ஆகையால் சொன்னதே போதுமெனக் கருதி அங்குள்ள புட்டிகளையெல்லாம் காலி செய்துவிட்டான். பிறகு இளவரசரைப்பார்த்து, "எஜமானே! நீர் ஏதோ மனக் கவலையுடன் இருப்பதாகத்தெரிகிறது. இவ்வாறு நான் நெருங்கிப்பேசிக் கேள்விகேட்டதற்காக மன்னிக்கவேண்டும். தங்கள் முகத்தில் காணப்படும் குறியைக்கொண்டே நானவ்வாறு கேட்டேன்," என்று பயந்து பேசுபவன்போல் பேசினான்.

இளவரசர்:—ஆம்; கபூர்! நான் உண்மையில் சிறிது கவலையுடன்தான் இருக்கிறேன். ஆனால் நாம் மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்குமுன் நீ சென்றவேலை என்ன ஆயிற்று. எவ்வளவுதூரம் அதை முடித்திருக்கிறாய் என்பதை விவரமாகச் சொல்லிவிடு.

கபூர்:—எஜமானே! தங்கள் கட்டளையைச் சிரமேற்றாங்கி நான் எல்லா வேலைகளையும் ஒழுங்காக முடித்துவைத்

திருக்கிறேன். கபூர் கிருஷ்ணன் இறங்கிய பின்னரும் ஒரு காரியம் பூர்த்தியாகாமலிருக்குமா? நான் செய்த ஒவ்வொரு வேலையையும் விவரமாகக் கூறுகிறேன். சென்றவாரம் தங்கள் உத்தரவு கிடைத்ததும் நான் நேராக டாக்டர் வீட்டுக்குச் சென்று அவ்வீட்டில் ஜனகன் என்னும் பெயரால் யாரேனும் ஒரு வாலிபன் இருக்கிறனு என்று விசாரித்தேன். முதலில் அவர் எதுவும் கூறச் சம்மதப்படவில்லை. ஆனல் நான் இளவரசரிடமிருந்து வருவதாக அவரிடம் இரகசியமாக அறிவித்தபின்னர் அவர் என்னை உள்ளே ஒரு அறையில் அழைத்துச் சென்று படுக்கையில் உட்கார்ந்திருந்த அழகிய வாலிபனிடம் அறிமுகம் செய்துவைத்துச் சென்றார். நான் எவரையும் எளிதில் என் வழிக்குக் கொண்டுவரக்கூடிய சக்தி வாய்ந்தவனுதலால், அவ்வாலிபனை என் பேச்சாலேயே ஒரு நிமிஷத்தில் சரிப்படுத்திவிட்டேன். சொற்பநேரத்துக்குள் நாம் இருவரும் தாராளமாகப் பேச ஆரம்பித்தோம். அவன் தனக்குப் பட்ட காயத்தினின்றும் சொஸ்தமடைந்துவிட்டானு என்று விசாரித்தேன். அதற்கு அவன், தான் சொஸ்தமடைந்து வருவதாகவும், ஆயினும் இத்தனை மாதங்களாகியும் இன்னும் பழைய பலத்தைப் பெறுததால் மிக பலஹீனமாக இருப்பதாகவும் கூறினன். பிறகு நான் அவ்வாலிபன் க்ஷேமத்தில் கருத்துள்ள வேறெருவர், டாக்டருக்கு வேண்டிய பணத்தையெல்லாம் கொடுத்து, அவனுடைய சௌகரியத்தைக் கவனித்து வருவதாகக் கூறினேன். அதற்கு அவ்வாலிபன், இத்தகைய சந்தேகம் தனக்கு முன்னமே ஏற்பட்டதென்றும், டாக்டர் தயாளத்துவம் காரணமாகத் தனக்கு இவ்வளவு உதவி செய்யவில்லை

யென்றும், வேறு ஏதோ இதற்குக் காரணமிருக்க வேண்டுமென்றும் தான் நினைத்ததாகவும், அதிலும் டாக்டர் தன்னை அதிகம் வெளியில் செல்லவிடாமல் பார்த்துக்கொள்வதால் மர்மமான காரணம் ஏதோ இருக்கிறதென்று கருதியதாகவும் கூறினன். அப்போது தான் நான், அவனை வேண்டுமென்றே அவ்வாறு பாது காப்பதாகவும், அவன் மீண்டும் துஷ்டர்களுடைய சக வாசத்தில் அகப்பட்டுக்கொள்ளாம லிருக்கும்பொருட் டும், யார் அவனை முன்பு வளர்த்தார்களோ அவர்கள் மீண்டும் அவனைத் தேடுவதால் இவ்வாறு ஜாக்கிரதை யாக இருப்பதாகவும் தெரிவித்தேன். அப்போது அவன் தான் நோயுடன் படுக்கையில் இருக்கும்போது, முன்பு செய்த தீவினைகளையெல்லாம் யோசித்துப் பார்த்ததாக வும், இனி அவ்வாறு செய்வதாக உத்தேசமில்லையென் றும் கூறினன்.

இளவரசர்:—ஓஹோ! அப்படியானல் அவன் நல்லவழியில் திருந்த விருப்பமுடையவனுக இருக்கிருனு?

கபூர்:—அதில் சந்தேகமே இல்லை. அவனை முன்பு ஒரு முறை துப்பறியும் செல்வநாதன், நல்ல வழியில் திருப்ப வேண்டு மென்னும் நல்லெண்ணத்துடன் அத்தீயவர் களின் கூட்டத்தினின்றும் அழைத்துச் சென்றதாயும் ஆனல் கெட்டகாலத்தின் பலனுக அவன் மீண்டு அக் கோஷ்டியில் கலந்து கொண்டு விட்டதாகவும், இப் போது அதிக நாளாகப் படுக்கையில் படுத்திருந்ததால் பலவித யோசனைகளைச் செய்து இறுதியில் இனி அக் கொடியவர்களுடன் சேருவதில்லை யென்று முடிவு செய்ததாகவும் கூறினன். அப்போது நான் அவனை முன்பு கூவாகத்தொழிலில் அமர்த்திக் கொண்டிருந்த

தானப்பன் அன்று காலைதான் கொலைக் குற்றத்துக் காகக் கைது செய்யப்பட்டு விட்டதாகவும், விரைவில் தூக்கிலிடப்படுவா னென்றும் கூறினேன். இச்செய்தி யைக் கேட்டு அவன் ஆச்சரியமோ திகிலோ அடைய வில்லை. ஏனெனின் தானப்பனுக்கு என்றேனும் ஒரு நாள் கெட்ட முடிவுதான் ஏற்படுமென அவன் நினைத் துக் கொண்டிருந்தானும். ஆனால் அவன் தானப்ப னிடம் தன்னுடன் வளர்ந்த ராசப்பன் என்பவனுக் காகவும் அவனுடைய சகோதரிக்காகவும் சிறிது வருத் தம் பாராட்டினான். அதற்கு நான், எனக்குத்தெரிந்த வரையில் அவர்களிருவரும் தானப்பனுடைய குற்றத் தில் சிக்கிக்கொள்ள வில்லை யென்று தெரியப்படுத்திய துடன், அப்படி ஏதேனும் அவர்களுக்குக் கஷ்டம் ஏற் படுவதாக இருந்தாலும் நான் அதற்குத் தக்கபடி ஏற் பாடு செய்து அவர்களுக்கு எத்தகைய துன்பமும் நேராதவாறு பார்த்துக் கொள்வதாகவும் கூறினேன். இவ்வாறு உறுதி யளித்ததால் அவனுக்குச் சந்தோஷம் அதிகரித்து விட்டது. உடனே அவன் என்னைக் கூர்மையுடன் நோக்கி, 'என் விஷயத்தில் அக்கறை கொண்டு இதுவரை என் க்ஷேமலாபங்களைக் கவனித்து வந்தவர் தாங்கள் தான் போலிருக்கிறதே' என்று ஆவ லுடன் கேட்டான். அதற்கு நான், 'அன்புள்ள வாலி பனே! நானாகவே இருப்பதாக வைத்துக்கொண்டாலும் நான் தான் என்றுசொல்ல நான் தயாராக இல்லை. இனி நீ இதைப்பற்றி ஒன்றும் கேட்கக்கூடாது' என்று கூறி நான் அவனைச் சமாளித்து விட்டேன். நான் இவ் வேலைகளுக்கெல்லாம் அஞ்சுபவனா?

இள:—கபூர்! நீ மிகச் சாமர்த்தியமாக உன் வேலையைச் செய்து முடித்திருக்கிறாய். உன் சாமர்த்தியமே சாமர்த்தியம். இதோ இந்த கிளாஸில் மதுபானத்தை அருந்து.

கபூர்:—ஆ! இப்பானம் மிக இனிமையாக இருக்கிறது. நான் மிகவும் சாமர்த்தியமாக வேலையைச் செய்ததனால் தான் அவனுக்கு என்னிடம் பூரண நம்பிக்கை ஏற்படும்படி செய்து விட்டேன். நான் அவன் தந்தையோ அல்லது நெருங்கிய பந்துவோ என்றுகூட அவன் நினைத்திருக்கலாம். எது எப்படியிருந்தாலும், நான் தான் அவனது விஷயத்தில் அதிக அக்கரைகொண்டு அவனுக்கு வேண்டிய சௌகரியத்தை யெல்லாம் செய்யவே அங்கு வந்திருப்பதாகவும் நம்பினான் என்பதில் ஆட்சேபமில்லை.

இள:—அப்படியா? உன்னிடத்தில் அவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டு விட்டதா?

கபூர்:—அதை ஏன் கேட்கிறீர்? நான் என் சொல்லுக்கு ஏற்ப செயலையும் செய்து முடித்துவிட்டேன். அவன் இஷ்டப் பட்டால் அவனை வெளிநாடுகளுக்கு அனுப்பி அங்குள்ள எனது நண்பர் ஒருவருடைய வியாபாரஸ்தலத்தில் நல்ல சம்பளத்தில் அமர்த்துவதாகவும், அவனை விட்டு நான் பிரியும்போது நூறுபவுன் கையில் கொடுத்துவிட்டு வருவதாகவும் கூறினேன். அவன் அதைப்பற்றி அதிகம் யோசனை செய்யாமல் சொற்ப நேரத்துக் கெல்லாம் தான் என்னிஷ்டப்படி நடந்து கொள்வதாகச் சொன்னான். உடனே நான் ஒரு வண்டியை வரவழைத்து அதிலேறித் துறைமுக நகரம் சென்று அங்கிருந்து கப்பலேறி ஜமைக்கா என்னும் தீவுக்குச் சென்று அங்குள்ள எனது நண்பர் வியாபா

ஸ்தலத்தில் அவனை அமர்த்திவிட்டு அவனிடமும் நான் முன்பு கூறியபடி நூறுபவுன் கொடுத்துவிட்டு அவனை விட்டுப்பிரிந்தேன். அப்போது அவன் நான் அவனுக்குச்செய்த உதவிக்காக எனக்கு நன்றிசெலுத்தி என்னை விட்டுப் பிரிவதற்காக மிகவும் வருந்தினன். நான் மீண்டும் கப்பலேறி வந்துவிட்டேன். போகும்போதும் சரி, வரும்போதும் சரி நான் கப்பலில் அனைவருடனும் தமாஷாகக் காலங்கழித்தேன். எல்லாரும் என் நடத்தையை அதிகம் பாராட்டினர்கள். ஜனகன், தான் பழையபடி ஜாடித்தீவிலுள்ளவர்களுடன் சேரவேண்டுமென்னும் எண்ணம் சிறிது மின்றி நன்ருகத் திருந்திவிட்டவன் போலும், இனி நல்லவழியிலேயே காலங்கழிக்க விரும்புகிறவன் போலவும் காணப்பட்டான். நான் இரத்தினபுரி வந்து சேர்ந்ததும் தங்களிடம் விவரம் கூறுவதற்காக இங்கு ஓடிவந்தேன்.

இள:—நான் இடும் கட்டளைகளை நீசாமர்த்தியமாகவும்,விரைவிலும், அபாயமின்றியும் செய்து முடிப்பாயென்பதை நான் நிச்சயமாக அறிவேன். ஆதலால் தான் என்னுடைய இந்த முக்கிய வேலைக்கு உன்னை நியமித்தேன். நீ அந்த வாலிபனுடன் பேசும்போது அவனுடைய விஷயத்தில் நான் அக்கரை கொண்டிருப்பதாக அவன் சிறிதும் சந்தேகியாதபடி நடந்து கொண்டிருக்கிருயல்லவா?

கபூர்:—இல்லவே இல்லை. அவன் தங்களைப்பற்றிச் சந்தேகிக்க இடமேயில்லை. அவன் நோயுடன் நீண்டகாலம் படுத்திருந்தகாலத்தும் டாக்டரும் அவனிடம் தாங்கள் அவன் விஷயத்தில் கவலை கொண்டதாகக் குறிப்பாலும் உணர்த்தவில்லை என்பது நிச்சயம். நானும் மிகச்

சாமர்த்தியமாகப் பேசினேன். மேலும் அவ்வாலிபன் தனக்கு மறைமுகமாக உதவிசெய்த மனிதன் நானாகவே இருக்கவேண்டுமென்று நிச்சயித்து விட்டானென்றும் கூறினேன் அல்லவா? அவனுக்குத் தங்கள் மீது ஞாபகமே இல்லை.

இள:—சரி, அப்படியே இருக்கலாம். அதில் சந்தேகமில்லை. இனி நாம் வேறு விஷயத்தைப் பற்றிப் பேசுவோம். நீ இவ்வேலையாக வெளியில் சென்றிருந்த காலத்தில் எனது நண்பன் ஒருவன் என்னைவிட்டுப் பிரிந்துவிட்ட சங்கதி உனக்குத் தெரியுமா? அவன் உனக்கும் சிநேகிதனான செல்லப்பனே.

கபூர்:—ஓ! செல்லப்பப்பிரபுவா? அவன் விரைவில் உங்களை விட்டுப் பிரிந்துவிடுவானென்பதை நான் முன்னரே அறிவேன். அவன் மனைவி எழுதிய கடிதங்கள் அவனை அவ்வாறு செய்துவிட்டன. மேலும் மதுரைநாயகம்பிரபு அவனுடைய கடன்களையெல்லாம் தீர்த்துவிட்டதும் அவனுக்குத் தன் மனைவியிடம் போகவேண்டுமென்று தோன்றிவிட்டது. ஆனால் அவன் என்னிடம் மிக்க சௌஜன்யமாகத்தான் நடந்துகொண்டான். சென்ற ஞாயிற்றுக்கிழமை நான் அவனிடம் சென்று ஒருவாரம் வரை வெளிநாட்டுக்குச் சென்று திரும்புவதாகக் கூறியபோது அவன் என் இருகாங்களையும் பிடித்துக்கொண்டு, "எனதன்புள்ள கபூர்! பல சந்தர்ப்பங்களில் எனக்கு உதவிசெய்த அருந்துணைவனாக நீ இருக்கிறாய். நான் இனி என் வாழ்க்கையிலேயே புதிய மாறுதல் ஏற்படுத்திக்கொண்டு பரிசுத்தமாக வாழப்போகிறேனென்றாலும் அப்போதும் உன் விஷயத்தில் ஒன்றும் வேறுவிதமாக நினைத்துவிடமாட்

டேன். என் பெயரும் உன் பெயரும் சேர்ந்து வாங்கிய கடன்களும் தீர்ந்துவிட்டன. ஆகவே எனக்காக நீ ஒன்றுக்கும் அஞ்சத் தேவையில்லை. மேலும் நம்முடைய பழைய நட்பின் அறிகுறியாக இதோ ஐந்நூறு பவுன்கள் உனக்கென வைத்திருக்கிறேன்," என்று கூறினன். இவ்வாறாக நாங்களிருவரும் பரஸ்பரம் பிரிந்தோம். ஆகவே செல்லப்பனுக்கு விரோதமாக நான் ஒன்றும் சொல்லமுடியவில்லை. இனி அவன் தன் மனைவியுடன் சௌகரியமாக எளியவாழ்க்கையை பெரியோர்கள் வகுத்துள்ள முறைப்படி நடத்துவான் என்பது நிச்சயம்.

இள:—ஆ! நீயாவது மதனவல்லியை மீண்டும் என்னிடம் சேர்ப்பிப்பாய் என்றல்லவோ நம்பியிருந்தேன். இப்போது நீ பேசுவதைப் பார்த்தால் உன்னாலும் அந்தக் காரியம் முடியாதென்றல்லவோ தோன்றுகிறது.

கபூர்:—சந்தேகமில்லாமல் முடியாது. மதனவல்லியைப்பற்றி அறிந்தவர்கள் ஒரு விஷயம் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். அதாவது அவள் அதிக மன உறுதி வாய்ந்தவள். ஏதேனும் ஒரு காரியத்தைச் சாதிக்க விரும்பினல் கட்டாயம் சாதித்தே தீர்வாள். ஆதலால் தாங்கள் இனி அவளை மறந்து வேறு ஏதேனும் அழகிய மாதைப் பிடித்துக்கொள்வதுதான் நலம்.

இள:—ஓ! அப்படியானல் நான் அந்த முடிவுக்கு வந்துவிடவேண்டியதுதான? ஆனல் இப்போது நான் உனக்கு என்ன பிரதி உபகாரம் செய்யவேண்டுமென்பதைச் சொல். அந்த வாலிபனை வேறொருதேசம் அழைத்துச் சென்று நல்லவேலையில் அமர்த்தியதால் நீ எனக்குப் பெரிய உபகாரம் செய்திருக்கிருய் அல்லவா? நான்

என் அவன் விஷயத்தில் இவ்வளவு அக்கரையுடைய வனு யிருக்கிறேனென்பதை உன்னிடம் சொல்லவில்லை அல்லவா? அதுமட்டுமல்ல. இப்போது சொல்லப் போவதுமில்லை. நீ அதைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்பதில் அவ்வளவு சிரத்தையுடை யவனு யிருக்க மாட்டாயென்றே நம்புகிறேன்.

கபூர்:—நான் ஒருகாலும் பிறர் விஷயத்தைப்பற்றி அறிய அநாவசியமாக ஆவல் காண்பிக்கமாட்டேன். மேலும் தாங்கள் எந்தவேலை சொன்னபோதிலும் அதை மறு மொழியில்லாமல் உடனே செய்து முடித்துவிடுபவன் நான் ஒருவனே. தங்கள் கட்டளையைச் சிரமேற்றாங்கி ஊழியம் செய்வதே என் கடமை. ஆனல், இளவா சரே! நான் இவ்வாறு சாமர்த்தியமாகவும் பணிவுட னும் செய்த வேலைக்காக எனக்கு ஏதேனும் உதவி செய்வதாகச் சொல்ல இப்போது விரும்பினீர்களல் லவா?

இள:—ஆம்; நீ என்ன விரும்புகிறுய் என்பதைச் சொல். ஆனல் கொடுக்க முடியாததையெல்லாம் கேட்டுவிடா மல் நியாயமானதைக் கேள். ஏனெனின் நீ பணத்தைத் தான் அதிகமாகக் கேட்பாய். இப்போது என்னிடம் பணம் அதிகமில்லை. நீ ஏதேனும் நல்ல அந்தஸ்தை விரும்புவதாயின்—

கபூர்:—அதைத்தான் நானும் கேட்கப்போகிறேன். உண்மை யென்னவென்றல் நானும் இதுவரை வாழ்ந்துவந்த வாழ்க்கையில் சலிப்படைந்துவிட்டேன். எப்போது பார்த்தாலும் குடியும் கூத்தியுமாகவே காலங்கழித்து போலீசாருடனும் இதர போக்கிரிகளுடனும் சண்டை யிடுவதிலேயே என் நாளெல்லாம் கழிந்தது. என் ஆள்

எச்சனும் என்னுடனேயே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் என் துணைவனுயிருந்து பல கஷ்டங்களை அனுபவித்து விட்டான். ஆதலின் இனியேனும் ஒழுங்குபட்ட வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதெனத் தீர் மானித்துவிட்டேன். எச்சனுடைய அபிப்பிராயமும் அதுதான். சொற்ப தினங்களாக, விவாகம் செய்து கொண்டுவிடவேண்டும் என்னும் எண்ணம் அதிகமாக இருக்கிறது. இதை நான் உண்மையாகவே சொல் கிறேன்.

இள:—ஆனல் நீ யாருடனே அன்புடன் இருப்பதாகத் தெரி கிறதே.

கபூர்:—இல்லவே இல்லை. நான் இதுவரை யாரிடமும் மனப் பூர்த்தியாக அன்புடன் இருந்ததேயில்லை. எந்த அழ குள்ள மாதையும் கண்டு பிரமித்ததும் கிடையாது. யார் அகப்பட்டாலும் என் காரியத்தை முடித்துக் கொள்வேனே தவிர எனக்கு யாரிடமும் காதல் ஏற் பட்டதில்லை.

இள:—அவ்வாருயின், நீ யாரேனும் ஒரு பணக்கார மாதை மனைவியாகப் பெற விரும்புகிருய் என்றுதானே நான் நினைக்கவேண்டும்?

கபூர்:—பணக்காரியாகத்தான் இருக்கவேண்டு மென்றாலும் பெரிய கோடீஸ்வரியாக இருக்கவேண்டுமென்பதும் அவசியமில்லை. வருஷவாரி சுமார் ஐந்நூறு பவுன் பெறக்கூடிய சொத்துடையவளாக இருந்தாலும் போதும். நான் அவளை வைத்துக்கொண்டு என் காலத்தைக் கடத்திவிடுவேன்.

இள:—சரி, அது அவ்வளவு பெரியதொகை என்று சொல்ல முடியாது. நீ விரும்பும் பெண் மிக்க அழகுடையவ ளாக இருக்கவேண்டுமா?

கபூர்:—இளவரசரே! தாங்கள் பேசுவது விசித்திரமாக அல்லவோ இருக்கிறது. என்னைப்போன்ற ஒருவன் கேவலம் தளர்ந்துபோன கிழவியையோ அல்லது ஆபாசமான உருவத்தையுடைய மங்கையையோ எப்படி விவாகம் செய்துகொள்ளமுடியும்? இதனாலேயே நான் பதினேழு பதினெட்டு வயதுடைய சிறு பெண்ணை விரும்புவதாக நினைக்கவேண்டாம். எனக்கு மனைவியாக வாய்ப்பவள் சுமார் முப்பது வயதுடையவளாகவும், கூடியவரையில் வசீகரத் தோற்றமுடையவளாகவும் நல்ல கம்பீரமானவளாயும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு மனைவி எனக்கு வாய்த்தால் நானும் ஒரு நல்ல சாமர்த்தியமுள்ள, இன்பத்தைத்தரும் கணவனாக இருப்பேன் என்பது உறுதி.

இள:—இப்போது நீ கூறியதுபோன்ற அம்சங்களுள்ள ஒரு பெண்ணை நான் உனக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறாய் போலும்! நான் எங்கே போவேன்? எனக்கு யார் தெரியும்? ஆனால் நான் இன்பம் அனுபவித்த கன்னிகைகளில் யாரையேனும் நான் அலட்சியம் செய்துவிட்டு அவளுக்கு ஒரு கணவனைத் தேடவேண்டியிருந்தால் அப்படிப்பட்ட பெண்ணை உனக்காக ஏற்பாடு செய்வதில் ஆட்சேபமில்லை. அது தவிர வேறு வழி எனக்கில்லை.

கபூர்:—இளவரசர் அனுபவித்துப் புறக்கணித்து விட்ட பெண்ணை மனைவியாகக் கொள்வதைவிடக் கேடான காரியம் உலகில் வேறொன்றுமில்லை. ஆயினும் என் செய்வது? தங்களுக்கு இதைத் தவிர வேறு வழியில்லையாதலின் நான் இதற்கும் சம்மதிக்கிறேன் நான் அவ்வாலிபன் விஷயத்தில் தங்களுக்குச் செய்த

உதவிக்காக ஏதேனும் பிரதியுபகாரம் செய்வதாகச் சொன்னீர்களே! அது சம்பந்தமாக என்னசெய்யப் போகிறீர்கள்?

இள:—அதுதானே! அவ்விஷயத்தை என்னிடம் விட்டுவிடு. உனக்கு என்ன உதவி செய்யவேண்டுமென்பது எனக்குத் தெரியும். உனக்குத் திருப்தி ஏற்படும்படியே கொடுப்பேன். இன்னும் சில தினங்கள் கழித்து ஒரு முறை இங்கு வா. அப்போது எல்லாம் பேசி முடித்துக்கொள்வோம்.

கபூர் கிருஷ்ணன் இதைக் கேட்டதும் அதற்குச் சம்மதித்துவிட்டு இளவரசர் அனுமதிபெற்று அம்மாளிகையை விட்டுச் சென்ருன். அவன் சென்றதும் இளவரசர் பக்கத்திலிருந்த மேஜையினருகில் உட்கார்ந்து தன் சகோதரியாகிய சுந்தராங்கிக்கு ஒருகடிதம் எழுதி அதில் அவளுடைய குமாரன் அந்நியதேசத்தில் தன் பார்வையில் சௌக்கியமாக இருப்பதாக அறிவித்தான். அக்கடிதத்தை அவன் எழுதி முடித்து மற்ருெரு மாளிகையிலுள்ள தன் சகோதரியிடம் கொடுத்துவிடும்படி ஒரு ஆளிடம் கொடுத்தான். உடனே அங்கிருந்த சேவகன் இளவரசனிடம் ஜயதேவி என்ற ஒரு மாது வந்திருப்பதாகவும், அவசரமாக இளவரசரைக் காண விரும்புவதாகவும் அறிவித்தான். அவள் ஏன் வந்திருக்கிருளென்பதை அறிந்துகொண்ட இளவரசர் உடனே அவளை அனுமதிக்கும்படி கட்டளையிட்டார்.

176 - வது அத்தியாயம்

ஜயதேவி இளவரசரின் அறையில் நுழைந்தபோது இளவரசர் ஒரு சோபாவின்மீது சாய்ந்திருந்தார். அதன் பக்கத்தில் ஒரு மேஜையின்மீது பல தின்பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. இளவரசர் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறார் என்பதையும், அவரிடம் எதுவும் அவசரமாகப் பேசக்கூடாது என்பதையும் அவள் அறிந்துகொண்டாள். ஆகவே அவள் மிக மரியாதை, ஆனால் சிறிது துக்கம் உடையவள்போல் தோன்றும்படி நடந்து கொண்டாள். ஏனெனின் சமயத்துக்குத் தக்கபடியெல்லாம் வேஷம் போடுவதில் அவள் மிக்க அனுபவமும் சாமர்த்தியமும் வாய்ந்தவள். இளவரசரும் வயதானவளான அம்மாதினிடம் அதிக மரியாதையுடையவனேபோல் சோபாவில் சாய்ந்திருந்தவர் எழுந்து உட்கார்ந்துகொண்டு தூரத்திலிருந்த ஒரு நாற்காலியைக்காட்டி அதில் உட்காரும்படி கையால் ஜாடை காண்பித்தார். பிறகு அவர் ஒன்றும் பேசவில்லை. அவளே தான் வந்த காரியத்தைப்பற்றி விவரமாகக் கூறுவாள் என எதிர்பார்த்தார்.

முதலில் இளவரசருடன் பணிவாகவும் நல்லதனமாகவும் பேசித் தன் வழிக்குத் திருப்பவேண்டுமென்றும் அதனால் சாத்தியப்படாவிட்டால் வம்புக்கிழுப்பதென்றும் ஜயதேவி தீர்மானித்துக்கொண்டு மெதுவாக மெல்லிய குரலில், "இளவரசரே! நான் துணிந்து இவ்விடம் வந்ததற்காகத் தாங்கள் மன்னிப்பீர்களென்று நம்புகிறேன். ஆனால் எங்கள் அரசர் பிரானின் பிரதிநிதியாகிய தங்களிடம் என் துக்கத்தைப்

பற்றிக் கூறிக்கொள்ளவே வந்தேன்'' என்று பணிவுடன் கூறினள்.

அதற்கு இளவரசர் அவள் கூறப்போகும் விஷயத்தை மிக்க சிரத்தையுடன் கேட்பவரேபோல், "அம்மணியே! நீ வந்த வேலையைப்பற்றித் தெரிவித்துக்கொள்,'' என்ருர். உடனே அவள், "எனது குமாரி பத்மாட்சி கருப்பவதியாகி இருக்கின்ருள். எதிர் காலத்தில் என்ன செய்வது என்பது பற்றி அவள் மிகக் கவலையுடன் இருக்கிருள்,'' என்று தெரிவித்துக்கொண்டாள்.

இளவரசர்:—மாதே! இன்னும் இரண்டொரு மாதங்களில் அவள் பிரசவிக்கவேண்டிய சமயத்தில் அரண்மனையை விட்டு எங்கேனும் சரியான இடத்துக்குச் சிறிது காலம் சென்றிருந்து நிலைமையைச் சமாளித்துக்கொண்டு விடும் படி முன்னரே உன் மகளிடம் கூறியிருக்கிறேனே. நீயும் இப்படிப்பட்ட விஷயங்களிலெல்லாம் அதிக அனுபவம் பெற்றவளல்லவா?

ஜயதேவி:—ஐயா! என்னைப்பற்றி ஏன் இவ்வளவு கேவலமாகச் சொல்கிறீர். திருட்டுத்தனமாகக் கருப்பத்தை அடைகிற கன்னிகைகளுக்கெல்லாம் யோசனை கூறுவதுதான் என் தொழில் என்று தாங்கள் கருதுகிறீர்களா? அப்படியாயின் தாங்கள் நினைப்பது தவறு.

இள:—மாதே! நான் சிறிது காமவிகார முடையவன் என்பதை ஆதாரமாகக் கொண்டு நான் உன் குமாரியுடன் இன்பம் அனுபவிக்கும்படிசெய்ய நீ எடுத்துக்கொண்ட முயற்சியையும், செய்த தந்திரங்களையும் நான் மறந்துவிடவில்லை. அதனல் இத்தகைய விஷயங்களெல்லாம் உனக்குத் தெரிந்திருக்குமென்றே நான் கருதினேன்.

ஜய:—அவ்வாருயின் என் மகள் தங்கள் ஆசையை நிறைவேற்றுவதற்குமுன் பரிசுத்தமுடையவளாயும் கற்புடையவளாயும் இருக்கவில்லையென்று தாங்கள் நினைக்கிறீர்கள்? அல்லது அவள் தங்களுடன் இன்பமனுபவிக்க விரும்பியதால் நான் அவ்வாறு முயற்சி செய்தேனென்று நினைக்கிறீர்களா?

இள:—இல்லை; நான் அப்படியெல்லாம் ஒன்றும் நினைக்கவேயில்லை. பத்மாட்சி என்னுடன் சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்வதற்கு முன் கற்பை இழந்திருந்தாளென்ருே வேறு விதமாகவோ அவள்மீது பழிசுமத்தவும் நான் விரும்பவில்லை. அதுமட்டுமல்ல. அவள் உண்மையிலேயே நீ கூறுவதுபோல் பரிசுத்தமானவளாய் இருந்தாளென்றும் நினைக்கிறேன். ஆனால் அவளுக்கும் எனக்கும் சம்பந்தம் ஏற்படும்படி தந்திரங்களைச் செய்தவள் நீதான் என்பதை மறுக்கமுடியுமா என்று கேட்கிறேன். ஆதலின் அவளை நீயே வலையில் சிக்கவைத்ததால் அவ்வலையினின்றும் அவளை மீட்க வேண்டியவளும் நீயே என்று நான்கூறுவது தவருகுமா? மேலும் நேற்றிரவு நான் அவளிடம் சொன்னபடி சில நூறு பவுன்கள் வேண்டுமாயின் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதற்குமேல் நான் என்னசெய்ய முடியும்? நீதான் என்ன எதிர்பார்க்கிருய்?

ஜய:—இளவரசரே! தாங்கள் கூறியதெல்லாம் சரிதான். ஆயினும் தாங்கள் என் குமாரியின் விஷயத்தில் இவ்வளவு அலட்சியமாக நடந்துகொள்வீர்களென்று நான் நினைக்கவேயில்லை. தாங்கள் ஏதோ என் மகளை நல்ல அந்தஸ்தில் வைத்துவிடுவீர்களென்றும் மிக ஆவலுடன் எதிர்பார்த்து பெருமை பாராட்டிக்கொண்டதுண்டு.

ஆனால் இப்போது வேறுவிதமாக நேர்ந்துவிட்டது தான் எனக்குத் துக்கத்தைத் தருகின்றது.

இள:—ஓ! அப்படியானால் நேற்றிரவு எனக்கும் உன் மகளுக்குமிடையில் நடந்த சம்பாஷணையெல்லாம் அவள் உனக்குத் தெரிவித்துவிட்டாள் போலும்! நான் என் சம்பந்தப்பட்டவரை உண்மையைக் கூறிவிடுகிறேன், கேள். உன் மகள் என்னிடம் கூறியதிலிருந்து அவள் ஏதோ உயர்ந்த பல விஷயங்களை என்னிடமிருந்து எதிர்பார்க்கிறாளென்று தெரிகிறது. அவள் மனதிலுள்ளவை என்ன என்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் நான் அவள் இன்பத்தை அனுபவித்ததற்காக அவள் ஏதோ பெரிய உபகாரத்தை என்னிடமிருந்து அபேட்சிக்கிறாள் என்பதுமட்டும் தெரிந்தது. ஆனால் மாதே நான் சொல்வதைக் கவனமாய்க்கேள். நான் உன் மகளைப்போன்ற பல கன்னிகைகளின இன்பத்தை அனுபவித்தவன். அவர்களெல்லாம் நான் அவர்களுடைய விருப்பத்துக்கு இசைகிறேனே என்பதற்காகவும், இளவரசர் அன்புக்குப்பாத்திரமானோமே என்பதற்காகவும் திருப்தி யடைந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட பெண்களெல்லாம் என் சம்பந்தத்துக்காக ஏதேனும் தொகை கேட்டாலும் எளிதில் கொடுத்துவிடமுடியும். ஆனால் எல்லாரும், இப்போது உன் மகள் விரும்பவதுபோல் உயர்ந்த பட்டங்களையும் பதவிகளையும் பென்ஷனையும் விரும்புவதென்றால் அவ்வளவு பேருக்கும் அவற்றைக் கொடுக்க என்னால் சாத்தியப்படுமா? அரசாங்க நிர்வாக சபையினர் பிறகு என்னை மதிப்பார்களா?

இவ்வாறு இளவரசர் கூறியதைக் கேட்ட ஜயதேவி சில நிமிஷநேரம்வரை ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்து

இளவரசருடன் இன்னும் சாந்தமான வழியிலேயே விவாதிப்பதா? அல்லது கடுமையாகப் பேசிவிடுவதா என்று சிந்தித்தாள். அவளுடைய நிலைமையை அவளது முகக்குறிப்பால் அறிந்துகொண்ட இளவரசர், இனிமேல் அவளால் ஒன்றும் பேசமுடியாதென்று நினைத்து அவர்களுடைய சந்திப்புக்காலம் முடிந்துவிட்டதாக அவளுக்கு உணர்த்தும் பொருட்டுச் சேவகனை அழைக்கும் தோரணையில் மணியை அடிக்கச்சென்றார். அப்போது ஜயதேவி சற்று உறுதியான குரலுடன், "அப்படியானால் என் மகளுக்குத் தாங்கள் எத்தகைய உதவியும் செய்வதில்லையென முடிவு செய்துவிட்டீர்களா?" என்று கேட்டாள்.

இள:—என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? என்மூலமாகப் பெரிய அந்தஸ்தையும், செல்வத்தையும் அடையலாம் என்னும் பேராசையுடன் அவள் என்னுடன் சம்பந்தம் ஏற்படுத்திக்கொண்டாள் என்பதை நினைக்கும்போதே எனக்கு வெறுப்பு ஏற்படுகிறது. நான் எப்போதுமே அவளது தாயாராகிய உன்பால் நல்லமதிப்பு வைத்ததில்லை. இப்போது உன் மகளையும் அவ்வாறே நினைக்கும்படி ஏற்பட்டதற்காக உண்மையிலேயே வருந்துகிறேன்.

ஜய:—ஐயா! தயவுசெய்து சற்று இருங்கள். சேவகனைக்கூப்பிடும் மணியை அடிக்கவேண்டாம். இதற்குள் நமது சம்பாஷணை முடிந்துவிடக்கூடாது என்று கண்டிப்பாகக் கூறுகிறேன். வேண்டாம். ஆத்திரப்படாதீர்.

இள:—மாதே! நீமட்டும் ஆணாக இருந்தால் உடனே என் சேவகனையழைத்து உன்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடும்படி கட்டளை யிட்டிருப்பேன். ஆனால், நீ ஒருமாதாக இருப்பதால் அவ்வளவு கேவல

மாக நடத்த முடியவில்லை. ஆகையால் விரைவில் அறையைவிட்டு வெளியே போகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஜய:—ஓ, அப்படியா! நான் ஆடவனாக இருந்திருந்தால் நீர் ஈவிரக்கமின்றியும் கேவலமாகவும் நடந்துகொண்டதற்காக உங்களை குதிரைச் சவுக்கினால் அடக்கவேண்டுமென்று தோன்றியிருக்கும். இருந்தாலும் நீர் என் வழிக்கு வாராவிட்டால் சரியானபடி பழி தீர்த்துக் கொள்ள என்னால் முடியுமென்பதை மட்டும் கூறி எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

இதைக் கேட்டு இளவரசர் உண்மையிலேயே பயந்துவிட்டார். ஏனெனின் ஜயதேவி எப்போதும் பணிவுடனும் அடக்கத்துடனுமே பேசுவாளேயன்றி இவ்வாறு கடுமையுடன் பேசுபவளல்ல. ஆதலின் அவள் தக்கபடி பழி தீர்த்துக்கொள்ள ஏதோ சௌகரியம் வாய்ந்தவளாக இருப்பதனால்தான் இவ்வாறு துணிந்து பேசினாள் என்றும் இளவரசர் கருதினார். ஆகவே அவர் அவளைப்பார்த்து, "எந்த விஷயத்தில் எச்சரிக்கை செய்கிறாய் என்பதை விவரித்துக்கூறு பார்ப்போம்" என்று ஒருவாறு வழிக்கு வந்தவர்போல் கேட்டார்.

அதற்கு அவள், "தாங்கள் உங்களுடைய ஆசனத்தில் நிதானமாக அமர்ந்தால் நான் சுருக்கமாக என் விஷயத்தைச் சொல்லி முடிக்கின்றேன்" என்றாள். இளவரசரும் அவளுக்குக் கட்டுப்பட்டு ஒன்றும் பேசாமல் பழையபடி சோபாவின் மீது உட்கார்ந்தார்.

ஜய:—இளவரசரே! நான் இவ்வாறு கடுமையுடன் பேசும்படி நேர்ந்ததற்காக உண்மையில் வருத்தப்படுகிறேன்.

அனல் நானே, என் குமாரியோ தங்கள் பாதத்தினடியில் எளிதாக அகப்பட்டுக்கொண்டு நசுக்கப்படும் புழு அல்ல என்பதைத் தாங்கள் அறியவேண்டும். உங்கள் ராஜகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு முக்கியஸ்தருடைய அதிமர்மமான ரகசியம் எனக்குத் தெரியும். அந்தப் பயங்கர இரகசியத்தை நான் வெளியிட்டுவிடுவேனுயின் இத்தேசம் முழுதும், ஏன்? இவ்வுலகம் முழுதும் அச்சத்துடனும் திகைப்புடனும் அதைக் கவனிக்குமென்பது நிச்சயம்.

இள:—உண்மையே! என்னைப்பற்றியும் என் குடும்பத்தையும் பற்றியும் பல இரகசியங்கள் இருக்கின்றன. அதில் நீ குறிப்பிடுவது எது என்று எனக்கு எப்படித்தெரியும்? ஆதலின் நீ சொல்லப்போகும் விஷயம் எது என்பது பற்றி விரைவில் கூறு பார்ப்போம்.

ஜய:—அவ்வாருயின் நான் வருத்தத்துடன் மேற்கொண்டு பேசுகிறேன். ஏனெனின் இவற்றையெல்லாம் தங்களிடம் பேசவேண்டுமென்பது என் கருத்தல்ல. ஆயினும் தாங்கள் எளிதில் என் வழிக்கு வாராமையால் இவ்வளவுதூரம் பேச நேரிட்டது. தங்களுடைய சகோதராகிய வைரசிங்கம் கோமகனைப்பற்றிய ரகசியம் எனக்குத் தெரியும். அந்த இரகசியத்தைப்பற்றிய ரிகார்டு என்னிடமிருக்கிறது.

இள:—ரிகார்டா? அது எப்படிப்பட்ட ரிகார்டு? அது எதைப் பற்றித் தெரிவிக்கிறது?

ஜய:—ஐயா, அது ஒரு கடிதம். அது கொலைசெய்யப்பட்டவனால் எழுதப்பட்டது.

இள:—கொலையா! இல்லை. கொலையல்ல. அவன் தற்கொலை செய்துகொண்டுவிட்டான். பஞ்சாயத்தார் விசாரணையிலும் அவ்வாறுதானே தீர்மானிக்கப்பட்டது.

ஜய:—பாவம்! சீனன் தற்கொலை செய்துகொண்டு விட்டா னென்று கூறப்படும் பொய்க்கதையைத் தாங்களும் நம்புகிறீர்களென்பதை நான் அறிகிறேன். ஆயினும் உண்மையில் நடந்த விஷயம் வேறு. அதற்கு வேண் டிய அத்தாட்சிகளும் இருக்கின்றன.

இள:—என்ன அப்படிப்பட்ட அத்தாட்சிகள்?

ஜய:—அப்படியா! கவனமாய்க் கேளுங்கள். நான் எல்லா விவரத்தையும் கூறுகிறேன்.

பிறகு ஜயதேவி தான் புஷ்பாங்கியினிடமிருந்து கேள் விப்பட்ட சீனன் கொலை சம்பந்தமான எல்லா விவரத்தையும் ஒன்றுகூட விடாமல் இளவரசரிடம் கூறினாள். இதைக் கேட்டதும் இளவரசர் மிக்க பீதியடைந்தார். ஏனெனின் அந்த ரகசியம், தன் சகோதரன் வைரசிங்கம் கோமகன் மட்டுமன்றித் தன் சகோதரியாகிய அமிர்தவல்லி ராஜகுமாரி யையும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. உடனே அவன் மனக்குழப்பத்தால் ஓரிடத்தில் உட்காரமுடியாமல் சோபாவை விட்டு எழுந்து அறையிலேயே மேலுங் கீழுமாக உலாவிக் கொண்டே தான் அறிந்த மர்மத்லைதப்பற்றி பெருமூச்சுவிட் டான். சீனனுடைய மரணம் சம்பந்தமாய் இளவரசர் ஒரு கால் அவன் தானகத் தற்கொலை செய்துகொள்ளாமல் வைர சிங்கம் கோமகனுல் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்றும் சந்தேகித்ததுண்டு. ஆயினும் அக்கொடிய செயலைப்பற்றி மறந்துவிட வேண்டுமென்பதற்காகவே அவர் அதைப்பற்றிப் பிறகு நினைக்கவேயில்லை. ஆனல் அமிர்தவல்லி ராஜகுமாரி யும் இப்போது அறிவிக்கப்பட்டபடி அவ்வளவு கேவலமான ஒரு காரியத்தைச் செய்திருப்பாளென இளவரசர் கனவிலும் கருதியதில்லை. இளவரசர் காமப் பித்துபிடித்துக் கண்ட பெண்களையெல்லாம் கெடுத்துவர் என்ருலும், சிறிதும்

உயர்ந்த கொள்கைகளை அனுஷ்டிக்காதவர் என்றாலும், தன் சகோதரியைப்பற்றிய செய்தியைக் கேட்டமாத்திரத்தில் தம் குடும்பத்துக்கு ஏற்பட்ட அவமானத்தை உணரக்கூடிய மனிதத்தன்மை அவரிடம் இல்லாமற்போகவில்லை. ஆகவே அவர் மனம் வருந்தியது. உலகத்தில் இப்படிப்பட்ட காரியங்களெல்லாம் நடக்கிறதா என்று நினைத்து ஆச்சரியமும் பீதியும் அடைந்தார்.

ஜயதேவியோ தான் இளவரசரிடம் அறிவித்து விட்ட செய்தி அவரை என்னபாடு படுத்துகிறதென்பதை அவரது முகத்தோற்றத்தால் அறிந்துகொண்டு இதனால் தனக்கும் தன் குமாரிக்கும் ஏதேனும் சௌகரியம் ஏற்படுமென்று நிச்சயமாக நம்பி மனதுக்குள் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தாள்.

மேலுங் கீழுமாக் உலாவிக்கொண்டிருந்த இளவரசர் திடீரென்று அம்மாது உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு எதிரில் வந்துநின்று அம்மாதை நோக்கி, "சீனனால் எழுதப்பட்ட கடிதத்துண்டைக் கொண்டுவர உன்னால் முடியுமா என்பதையும் அப்படிக் கொண்டுவந்தால் என்ன சன்மானம் எதிர்பார்க்கிறாய் என்பதையும் சொல்லிவிடு," என்று ஆவலுடன் கேட்டார்.

ஜய:—தடையின்றி என்னால் கொண்டுவரமுடியும். நான் தங்களிடமிருந்து எதிர்பார்ப்பதும் அதிகம் ஒன்றும் இராது. என் மகளுக்கு ஏற்பட்ட அவமானத்தால் ராஜமாளிகையில் என் அந்தஸ்தும் கௌரவமும் கெட்டுப்போகாதபடி பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தாங்களே செய்யவேண்டும். இதுதான் எங்கள் இருவருடைய கோரிக்கை.

இள:—நீ கூறுவதெல்லாம் சரிதான். நான் எப்படி உங்களைப் பாதுகாக்கமுடியும்? வேண்டுமாயின் பெரிய தொகையையேனும் கொடுப்பதில் தடையில்லை. உன் மகள் நேற்று இரவு பேசியதைப்பார்த்தால் அவள் பட்டத்தையும் பதவியையும் விரும்புவதாக அல்லவோ தெரிகிறது. அவளுக்குக் கலியாணமாயிருந்தாலும் வேறு விதமாக இருக்கும். அவளுடைய கணவனுக்கு ஏதேனும் செய்து அதை அவளும் அனுபவிக்கும்படி செய்யலாம்.

ஜய:—கலியாணமாய்விட்டிருந்தால் எங்களுக்குத்தான் இவ்வளவு கஷ்டமோ அவமானமோ இராதல்லவா? அவளுடைய கணவனுக்குத் தாங்கள் ஏதேனும் காரணங் காட்டிப் பட்டத்தையும் பதவியையும் கொடுத்துவிடுவீர்கள். ஆனால் அவள் இப்போதுள்ள நிலைமையில், இது பகிரங்கப்பட்டுவிடுமாயின், இனி கலியாணம் செய்துகொள்ளவே முடியாமற்போகுமே. அதுதானே இப்போது எங்களை அதிகம் வருத்துகின்றது.

இள:—மாதே! சற்றுபொறு. எனக்கு ஒரு யோசனை இப்போதுதான் தோன்றுகிறது. அதன்படி ஏற்பாடுகளைச் செய்துவிடுவோம். உன் மகள் என்னிடம் தன் கற்பை இழந்தவளென்றும், இப்போது மூன்று அல்லது நான்குமாத கருப்பிணியாய் இருக்கிறாளென்றும் தெரிந்தால்கூட அவளை மணந்துகொள்ளக்கூடிய ஒருவனை நான் கண்டுபிடித்தால் அவனை மணந்துகொள்ள உன்மகள் சம்மதிப்பாளா?

ஜய:—அவள் நிச்சயமாகச் சம்மதிப்பாள். ஆயினும் அக்கணவன் குறைந்தது ஒரு பிரபுவாகவும், அவளைச் சௌகரியமாக வைத்துக்கொள்ளக்கூடிய வருஷவாரி

வரும்படி உள்ளவனாகவும்; பார்வைக்கு மிக ஆபாச மில்லாமல் விரும்பத்தக்க தோற்றமுடையவனாயும் இருத்தல் வேண்டும். ஏனெனின் என் குமாரி கேவலம் பரம ஏழையையும், விகார சொரூப முள்ளவனையும் விவாகம் செய்துகொள்ளச் சம்மதிக்கமாட்டாள்.

இள:—இல்லை. இல்லை. இப்போது நான் யோசித்திருக்கும் மனிதன் பார்வைக்கு விகாரமாயில்லாமல் போதுமான அளவு அழகுடையவனாகவே இருப்பான். அவனை எத்தனையோ பெண்கள் மோகித்ததும், அவனும் இது வரை பலரிடம் இன்பம் அனுபவித்ததும் எனக்குத் தெரியும். மற்றப்படி பதவியையும் பணத்தையும்பற்றிக் கவலை வேண்டாம். வருஷவாரி குறைந்தது ஐந்நூறு அல்லது அறுநூறு பவுன் வருமானத்தையும் அதற்கேற்ற பட்டத்தையும் அவன் பெறக்கூடிய பதவியில் அவனை நான் அமர்த்தி விடுகிறேன். எப்படியேனும் உன்மகளும் நீயும் கௌரவமாகவும் சுகமாகவும் காலங் கழிக்க வேண்டு மென்பதுதானே உங்கள் கோரிக்கை.

ஜய:—இப்போது தாங்கள் கூறிய யோசனையை நான் மனமார ஒப்புக்கொள்கிறேன். என் குமாரியும் ஒப்புக் கொள்வாள் என்பதில் சந்தேகமில்லை.

இள:—சரி! அப்படியானால் நீ மேற்படி கடிதத்துண்டுடன் எப்போது வருகிறாய்? அதிக தாமதம் செய்யவேண் டாம். நாளையதினமே வந்தாலும் எனக்குச் சந் தோஷமே.

ஜய:—தங்கள் யோசனையும் நிறைவேறும்பொருட்டு நான் நாளையதினம் வரும்போது என்குமாரி பத்மாட்சி யையும் அழைத்து வருகிறேன். தாங்கள் யாரை அவளுக்கு மணம்முடிக்க விரும்புகிறீர்களோ அவரையும்

அழைத்து வைத்திருந்து இருவரையும் அறிமுகம் செய்து வையுங்கள்.

இள:—அப்படியே ஆகட்டும். நாளை பகல் மூன்றுமணிக்கு நீ உன்மகளுடன் வா. நானும் அந்த ஆளை அழைத்து வைக்கிறேன். வரும்போது கட்டாயம் மறந்துவிடாமல் அக்கடிதத்துண்டைக் கொண்டுவா.

இளவரசர் இவ்வாறு கூறி முடிந்ததும், ஜயதேவி தான் வந்த காரியம் வெற்றியுடன் முடிந்ததென்னும் சந்தோஷத்துடன் தன் மாளிகையை நோக்கிப் புறப்பட்டாள். போகும் வழியில் அவள் தன் நட்பினளும் உடன்வேலை செய்பவளுமாகிய புஷ்பாங்கியின் பெட்டியிலிருந்து சினனுல் எழுதப்பட்ட கடிதத்துண்டை எப்படியாவது திருடிவிட வேண்டும் என்று யோசித்துக்கொண்டே சென்றாள். தன் மகளிடம் தான் சென்ற காரியத்தில் வெற்றி யடைந்தது பற்றிச் சந்தோஷத்துடன் தெரிவிக்கவும் ஆவலுடன் பல விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே சென்றாள்.

இளவரசர் பத்மாட்சியின் விஷயத்தில் தனக்கிஷ்டமானபடி நடந்துகொள்ளாமல் ஜயதேவியின் இஷ்டப்படி நடக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் சிக்கவைத்தது எது என்பதை நேயர்கள் கவனிக்கவேண்டியது அவசியமாகும். வைரசிங்கம் கோமகன், அமிர்தவல்லி ராஜகுமாரி ஆகியவர்களின் மர்மம் ஜயதேவிக்குத் தெரிந்து விட்டதனால்தான் இளவரசர் அவளிஷ்டப்படி நடக்கவேண்டியதாயிற்று. ஏனெனின் தம் குடும்பத்தைப்பற்றி வண்டவாளம் வெளியாவதைத் தடுக்க விரும்பியதே அதற்குக் காரணமாகும். இதனால் பெரியோர்கள் வகுத்த அறநெறியினின்றும் தவறிவிடுவோர் எப்படிப்பட்ட செல்வர்களேயாயினும், கல்வியிற் சிறந்த வித்வான்களேயாயினும், அவர்களுடைய ரகசியத்தைப்பற்றி அறிந்த

கேவலமான பேர்வழிகளுக்கும் அவர்கள் அஞ்சி நடக்க வேண்டியதாகிறது. ஆதலின் எவரும் தவறானவழியில் செல்லலாகாது. அதிலும் அவ்விஷயம் தங்களைவிடத் தாழ்ந்தவர்களுக்குத் தெரிந்துவிடும்படி நடந்துகொள்வது பிராணசங்கடத்தைத் தரும் என்பதை இவ்வத்தியாயம் நன்கு புலப்படுத்துகின்றது.

177 - வது அத்தியாயம்

முன் அத்தியாயத்தில் கூறிய விவரம் நடந்ததற்கு மறுநாள் பகல் சரியாக மூன்றுமணிக்கு ஜயதேவியும், அவளது குமாரி பத்மாட்சியும் இளவரசருடைய மாளிகைக்கு வந்தார்கள். உடனே அவர்களிருவரும் ஒரு தனியான அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கே இளவரசர் அழகாக அலங்கரித்துக்கொண்டு அவர்களுடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அம் மாதர்களிருவரும் அறையில் நுழைந்ததும் இளவரசர் அன்புடன் அவர்களை வரவேற்பதுபோல் எழுந்து அவர்களை எதிர்கொண்டு அழைத்தனர். இளவரசர் பத்மாட்சியின் கையைப்பிடித்துக் குலுக்கி அவள் கழுத்தில் கையைப் போட்டு ஆதரவுடன் அணைத்து முத்தமிட்டார். இளவரசரின் இச்செயலைக் கண்டதும் தாயும், மகளும் ஆச்சரியமடைந்தனர். ஏனெனின், அதற்கு முன்நாள் ஜயதேவி மட்டும் இளவரசரைச் சந்திக்க வந்தபோது அவளை அவர் அலட்சியமாக நடத்தினாரல்லவா? அதுபோல் மறுநாளும் அலட்சியமாகவே இருப்பாரென்று அவர்கள் கருதியதற்கு மாறாக அவர் நடந்து கொண்டதால் ஆச்சர்யமடைந்தார்கள். எவ்வாறாயினும் இளவரசர் மனமாறுதல் அடைந்தது

பற்றி ஜயதேவி அதிக சந்தோஷமடைந்தாள். பத்மாட்சியும் உள்ளத்தில் இளவரசரை அதிகம் வெறுத்தாளென்றாலும் மேலுக்கு அவரிடம் பழையபடி அன்புடன் இருப்பவளே போல் அவருடைய சல்லாபங்களுக்கெல்லாம் தாராளமாக இடங்கொடுத்தாள்.

அவ் விருமாதர்களையும் அங்கேயிருந்த ஒரு சோபாவின் மீது உட்காரச்செய்து தானும் அவர்களிடையில் உட்கார்ந்து கொண்டார். பிறகு அவர் வேடிக்கையாக, "ஆ! கடைசியாக நாம் எதிர்பாராதபடியெல்லாம் நடக்கின்றன. நேற்று வரையில் நான் இவ்வாறு ஒரு விவாகத்தை முடிக்கும் ஏஜண்ட் என்னும் தாகனாக இருப்பேன் என்று கனவிலும் கருதியதில்லை. பத்மாட்சி! நான் இவ்வாறு கூறியதைக் கேட்டு நீ வெட்கப்படுவதுபோல் தெரிகிறது. ஆயினும் உனக்காக நான் ஏற்பாடு செய்திருக்கும் கணவனைக்கண்டால் நீயே சந்தோஷப்படுவாய் என்றே நான் நினைக்கிறேன்," என்றார்.

பத்மாட்சி:—இளவரசரே! இவ்வாறான ஒரு ஏற்பாட்டுக்கு நான் ஒருகாலும் ஒப்புக்கொள்ளக் கூடியவளல்ல. ஆயினும் தங்களுடைய செயலால் நான் இப்போது இப்படிப்பட்ட நிலைமையில் சிக்கிக்கொண்டு எதற்கும் தயாராக இருக்கவேண்டி யிருப்பதனால்தான் தங்கள் ஏற்பாட்டை விதியில்லாமல் ஒப்புக்கொள்கிறேன்.

இளவரசர்:—கண்மணி! நான் முந்தாநாள் காலை உங்கள் மாளிகைக்கு வந்திருந்தபோது உன்னிடம் கடுமையாகவும் அசிரத்தையாகவும் நடந்து கொள்ளும்படி நேர்ந்ததற்காக வருந்துகிறேன். அப்போது வேறு பல விஷயங்கள் என்னைக் கவலைக்குள்ளாக்கிவிட் டிருந்தன.

பத்மா:—ஆம்; எல்லா விஷயங்களைவிட மதனவல்லி தங்களை விட்டுப் பிரிந்து போனதுதான் தங்களுக்கு அதிக கவலையைக் கொடுத்ததுபோலும்!

இள:—எனது மனதை அப்படியே கவர்ந்துவிட்ட ரூப லாவண்யத்திற் சிறந்த என் காதலி மதனவல்லியை நான் இழந்ததால் உண்மையில் கவலைப்படுகிறேன் என் பதை நான் மறுக்கவில்லை. ஆனால் மதனவல்லியைப் பற்றி உனக்குப் பொறாமைபோலும். சே! அது கூடாது. நீ இப்போது நல்ல அழகிய, யௌவன புரு ஷனை விவாகம் செய்துகொள்ளப் போகிறாய். இச் சம யத்தில் உனக்கு இப்படிப்பட்ட பொறாமை முதலிய குணங்கள் இருக்கலாகாது.

இதற்குள் பத்மாட்சியின் தாயார் ஜயதேவி குறுக் கிட்டு, "அப்படியானால் என் மகளுக்காக ஒரு கணவனைத் தேடுவதில் தாங்கள் அதிக கவனம் செலுத்தி நான் நேற்று கூறிய லட்சணங்களுடன் அவன் இருக்கும்படி பார்த்துக் கொண் டிருக்கிறீர்களா? கணவனைக்கொள்வதில் வெட்கப் படக்கூடிய நிலைமையில் ஆடவன் இருப்பானாயின் அப்படிப் பட்டவனை என்மகள் விவாகம் செய்துகொள்ள முடியாது," என்று தெரிவித்தாள். அதற்கு இளவரசர், "அப்படியல்ல. நான் தேர்ந்தெடுத்திருக்கும் ஆடவன் விஷயத்தில் நமது பத்மாட்சி சந்தோஷப்படுவாள் என்பது நிச்சயம். அவன் பார்வைக்கு இனிய தோற்றமுடையவனாகவும், நல்ல தேக திடமுடையவனாகவும் இருக்கிறான்," என்று கூறிக் கொண்டே பத்மாட்சியை நோக்கி, "ஏனம்மா! அவன் அடர்த்தியான மீசையுடையவனாக இருப்பதை நீ விரும்பு கிறாயா? இல்லையா?" என்று வேடிக்கையாகக் கேட்டார்.

அப்போது பத்மாட்சி வெட்கமும் கோபமும் ஆத்திர மும் அடைந்தவளாய், "ஐயா, தாங்கள் இவ்வாறு பேசு

வதால் இன்னும் ஏதோ எங்களுடன் வேடிக்கைசெய்து கேவலப்படுத்துவதாகத் தெரிகிறதேயொழிய எங்களிடம் அன்போ, இரக்கமோ இருப்பதாகத் தெரியவில்லை. முன்னமே என் மனம் அதிகம் புண்பட்டிருக்கிறது," என்று பரபரப்புடன் கூறினுள்.

இளவரசர் தன் கையை அவள் தோள்மீது போட்டுத் தன் விரல்கள் அவளது மார்பில் இருக்கச்செய்து சிரித்துக் கொண்டே, "எனதன்புள்ள பத்மாட்சி! கோபிக்கவேண்டாம். உன்னுடன் பரிகாசமாகப் பேசிக்கொண்டு சமாதானமாய்விடலாம் என்று கருதியே இவ்வாறு பேசினேன். நீ கோபித்துக் கொள்வதாயிருந்தால் நான் ஒன்றும் பேசுவதேயில்லை. இப்போது நீங்கள் வந்தவேலையை மட்டும் கவனிப்பதைவிட நாமும் சிறிதுநேரம் வேடிக்கையாகப் பேசலாமென்று நினைத்தேன். நீ இவ்வளவு கோபித்துக் கொள்கிறுயே!" என்று கூறினர். அதற்கு அவள், "உண்மையில் அதுவே உங்கள் நோக்கமாக இருக்குமாயின் நீங்கள் எவ்வளவு வேடிக்கை பேசினுலும் அதை ஏற்றுக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன்," என்று கூறிக் கொண்டே அவரது காத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சோபாவின் ஒரு மூலையில்போய் உட்கார்ந்தாள்.

இளவரசர் ஜயதேவியைப்பார்த்து, "மாதே! நேற்று நீ என்னிடம் தெரிவித்த அக்கடிதத்தைக் கொண்டுவந்திருக்கிருயா?" என்று ஆவலுடன் கேட்டார். அவளும் அப்படியே கொண்டுவந்திருப்பதாகச்சொல்லி புஷ்பாங்கியின் பெட்டியிலிருந்து திருடிக்கொண்டுவந்த கடிதத்தைக் காண்பித்தாள்.

இள:—அக்கடிதத்தை என்னிடம் கொடுப்பாயா? நானே வைத்துக்கொண்டு விடுவதற்காகக் கேட்கவில்லை. உன்

மகளிடம் அவளுக்காக ஏற்பாடு செய்திருக்கும் கண வனை அறிமுகம் செய்து வைக்கும்வரை அக்கடிதத்தை எடுத்துக்கொள்ள எனக்கு உரிமை இல்லை என்பதை நான் அறிவேன். ஆயினும் இப்போதே படித்துக் கொடுத்து விடுகிறேன்.

ஜய:—இல்லை. என்னையே படிக்க அனுமதித்துவிட்டால் நானே படித்துக் காண்பித்துவிடுகிறேன். அதில் நான் நேற்று தங்களிடம் தெரிவித்த விவரங்கள்தான் இருக் கின்றன.

இள:—அப்படியானால் நீதான் படி. அக்கடிதத்தை என் னிடம் கொடுத்துவிட்டால் நான் கூறிய வாக்குறுதி யின்படி நடக்காமல் அக்கடிதத்தையும் வைத்துக் கொண்டு விடுவேன் என நீ நினைப்பதாயின் என் கௌரவத்தில் நீ நம்பிக்கை இல்லாதவளாக இருக் கிறாய் என்றல்லவோ ஏற்படுகிறது.

ஜய:—இளவரசரே! நான் முன்னெச்சரிக்கையுடன் இருப் பதுபற்றித் தாங்கள் கோபிப்பதோ ஆச்சரியப்படுவதோ நியாயமல்ல. நான் கடிதத்தைப்படிக்கிறேன் கேளுங் கள்.

ஜயதேவி படித்த கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக் கிறதென்பதை இதற்கு முன்னரே இரண்டொரு அத்தி யாயங்களில் விவரித்திருக்கிறபடியால் அதை மீண்டும் இங்கு எழுதவேண்டிய அவசியமில்லையென்றே கருதுகிறோம். அக் கடிதத்தை அவள் படித்துக்கொண்டே வந்தபோது அமிர்த வல்லி ராஜகுமாரியின் துர்நடத்தையைப்பற்றிய பிரஸ்தாபம் வந்தபோது இளவரசரின் முகம் மிகவும் வாடியது. தன் சகோதரரும் சகோதரியும் இவ்வளவு பெரிய குற்றங் களுக்கு ஆளாகி யிருக்கிறார்களே என்று நினைத்து வருந்தி

ளூர். இதனல் அவள் அக்கடிதத்தைப் படித்து முடித்த பின்னரும் இரண்டொரு நிமிஷநேரம்வரை இளவாசர் வாய் திறந்து பேசாமல் பல விஷயங்களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

சற்றுநேரங் கழித்தபிறகு இளவரசர், "மாதர்களே! நீங்களிருவரும் என் சகோதரி, சகோதரர் சம்பந்தப்பட்ட ஒரு பெரிய ரகசியத்தை அறிந்திருக்கிறீர்கள். நான் நேற்று ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றி விடுகின்றேன். என் நண்பனுன ஒரு கனவானிடம் பேசி முடிவு செய்திருக் கிறேன். அவன் பத்மாட்சியை விவாகம் செய்துகொள்ளச் சம்மதித்திருக்கிறுன். அவனது தோற்றத்தைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அவன் அந்தஸ்திலும் குறைந்தவனல்ல. ராணுவப்பட்டத்தைப்பெற்ற காப்டன். இதோ போதாக்குறைக்கு வருஷவாரி சுமார் எண்ணூறு ரூபாய் வருமானம் தரத்தக்க பிரபுப்பட்டத்தையும் நான் அவனுக்காக அரசாங்க நிர்வாகிகளிடமிருந்து வாங்கி வைத் திருக்கிறேன். ஆகவே எனது வாக்குறுதியை நிறைவேற்று வதில் நான் கருத்துடையவனு யிருக்கிறேன் என்பது தெரி கிறதல்லவா? நான் குறிப்பிட்ட கனவான் இந்த அரண் மனையிலேயே, ஏன்? பக்கத்து அறையிலேயே, உங்களைச் சந்திக்கும்பொருட்டே காத்திருக்கிறுன். ஆனல் நான் எல்லா நிபந்தனைகளையும் நிறைவேற்றிய பின்னர் நீங்கள் மீண்டும் மீண்டும் புதிய கோரிக்கைகளைக் கேட்கமாட்டீர்க ளென்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது?" என்று கேட்டான்.

அப்போது பத்மாட்சி உண்மையை மறைத்துப்பேச விரும்பாதவள்போல் உறுதியான பாவனையில், "இளவரசரே! தாங்கள் கூறுவதுபோல் நாங்கள் இனியும் புதிய கோரிக்கை

களைக் கேட்கமாட்டோமென்பதற்கு என்ன அத்தாட்சி யளிப்பதென்று எனக்கே தெரியவில்லை. ஆயினும், நாங்கள் இதுவரை கஷ்டப்பட்டதெல்லாம் எனது அவமானத்தை மறைத்துக் கொள்வதுடன் நல்ல அந்தஸ்தில் இருக்க வேண்டுமென்பதற்காகவே. அந்த எண்ணம் இப்போது தங்கள் ஏற்பாட்டினால் நிறைவேறிவிடுகிறது. ஆதலின் இனி நாங்கள் தங்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்கமாட்டோம். இதுவரை எதிர்பார்த்ததும் தங்களுக்குக் கஷ்டம் கொடுக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அல்ல. எங்கள் சௌகரியம்பற்றியே. இதைத் தாங்கள் நிச்சயமாக நம்புங்கள். இப்போது நான் கூறிய இந்த அபிப்பிராயத்தை என் தாயாரும் ஒப்புக்கொள்வாள் என்பதில் சந்தேகமில்லை," என்று கூறினாள்.

அதைக்கேட்ட அவள் தாயாரும், "ஆம், பத்மாட்சி கூறியதுதான் சரி, உண்மையான விஷயத்தை நன்கு வெளியிட்டுவிட்டாள். ஆகவே நான் அதற்குமேல் ஒன்றும் கூறப் போவதில்லை. நாங்கள் இனி ஒன்றையும் தங்களிடமிருந்து எதிர்பார்க்கமாட்டோம். அப்படியே நாங்கள் ஏதேனும் அனுவசியமாகத் தொந்தரை செய்வதாகவே வைத்துக் கொண்டாலும் எங்களைப் பழிவாங்குவது தங்களுக்குப் பெரிய காரியமா? மகாராணியர்ரிடம் ஒருவார்த்தை தாங்கள் கூறிவிட்டால் என் பிழைப்பில் மண் விழுந்துவிடுமல்லவா? அதேமாதிரி தாங்கள் இஷ்டப்பட்டால் பத்மாட்சியின் கணவனுக்குத் தாங்கள் இப்போது கொடுக்கும் பட்டத்தையும் பதவியையும் ஒரு நிமிஷத்தில் பிடுங்கி விடலாமன்றோ? ஆதலின் தங்கள் வெறுப்புக்குப் பாத்திரர்களாகக் கூடாது என்னும் அச்சம் எங்களுக்கு இருக்கும் என்பது நிச்சயம்." என்று இளவரசரிடம் தெரிவித்தாள்.

இளவரசர்:—சரி; நீங்கள் கூறியதை சரியென்றே வைத்துக் கொள்வோம். ஆயினும், அக்கடிதத்தை என்னிடம் சொற்பநேரத்துக்குக் கொடுக்கவும் சந்தேகப்பட்ட உங்களிடம் நானும் சந்தேகங்கொண்டு முன் எச்சரிக்கையுடன் இருப்பது குற்றமாகாதன்றே? ஆ இப்போது நான் உங்களைக் கேட்கவேண்டிய கேள்வி ஒன்று இருக்கிறது.

ஜயதேவி:—அப்படியானல் அக்கேள்வி என்ன என்பதையும் தெரிவித்து விடுங்கள். நான் அதற்குப் பதில் அளிக்கும்போது நான் ஒளிமறைவின்றி நியாயமாகவே தங்களிடம் நடந்து கொள்கிறேன் என்னும் உண்மை வெளியாகும்.

இள:—என் சகோதரன், சகோதரி ஆகியவர்களைப்பற்றிய இப்படிப்பட்ட பயங்கரமான இரகசியத்தை நீ யாரிடமிருந்து அறிந்துகொண்டாய் என்று இன்னமும் எனக்குத் தெரிவிக்கவில்லையே. அக்கடிதம் உன்னிடம் கொடுத்தது யார்?

ஜய:—தங்கள் தாயாரின் அந்தப்புரத்தோழிகளில் ஒருத்தியாகிய புஷ்பாங்கியிடமிருந்தே விஷயங்களையும் தெரிந்துகொண்டேன்; கடிதத்தையும் பெற்றேன்.

புஷ்பாங்கியின் பெயரைக் கேட்டமாத்திரத்தில் இளவரசர் தன் மனதில், "ஓ, அந்தக் கிழவியா? நீண்டகாலமாக நமது அரண்மனையில் இருக்கிருள். அவளுக்கு உண்மை விஷயம் தெரிந்திருக்கலாம் என்பது வாஸ்தவமேயாயினும் அவளைச் சரிப்படுத்திக்கொள்வது பெரிய வேலையல்ல. சினனுடைய இக்கடிதத்தை நெருப்பில் போட்டு எரித்து அழித்துவிட்டால் பிறகு அதைப்பற்றிய பயமில்லை" என்று நினைத்துக்கொண்டு வெளியில் அம்மாதர்களுக்குக் கேட்கும்

படி உரக்க, "சரி, இனி நாம் பேசி முடித்துக்கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. நான் பத்மாட்சியை அவளுக்கெனத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள கணவனிடம் அறிமுகம் செய்துவைத்து அந்த ஆடவனுக்குப் பிரபுப்பட்டம் முதலியவற்றை அளிக்கும் இந்த பத்திரத்தை அளித்ததும், அந்தசினனுடைய கடிதம் என்னிடம் கொடுக்கப்படவேண்டும் என்பது ஞாபகத்திலிருக்கட்டும்" என்றான்.

அதற்கு ஜயதேவி, "ஆம், அப்படித்தானே நமக்குள் ஏற்பாடு. நான் நமது ஏற்பாட்டின்படியே நடந்துகொள்வேன் என்பது நிச்சயம்," என்றாள். இதற்குள் பத்மாட்சி குறுக்கிட்டு மிக வெட்கத்துடன், "இன்னும் ஒரு விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்படவில்லையே," என்று ஞாபகமூட்டினாள். அப்போது ஜயதேவி, "ஓ, என்மகள் என்ன கூறுகிறாள் என்பதை நான் தெரிந்துகொண்டேன். பத்மாட்சிக்காக யாரைக் கணவனாக ஏற்பாடு செய்திருக்கிறீர்களோ அவரிடம் பத்மாட்சியின் இப்போதைய உண்மை நிலையைத் தெரிவித்திருக்கிறீர்களா?" என்று இளவரசரைக் கேட்டாள்.

அதற்கு இளவரசர், "அவனுக்கு எல்லா விஷயங்களும் தெரியும். இருந்தாலும் என்னிடம் அவனுக்கு இருக்கும் அளவிலா அன்பின் காரணமாகப் பத்மாட்சியை இத்தகைய நிலைமையிலும் விவாகம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டான். இப்போது எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன என்றும், பத்மாட்சியை ஆடவனிடம் அறிமுகம் செய்துவைக்க வேண்டியதுதான் பாக்கி என்றும் கருதுகிறேன்" என்று கூறினார்.

இவ்வாறு கூறிக்கொண்டே இளவரசர் தன் ஆசனத்தைவிட்டு எழுந்து அவ்வறையின் கதவை நோக்கிச்

சென்றார். உடனே பத்மாட்சியும் ஜயதேவியும் கூடத் தங்கள் ஆசனத்திலிருந்து எழுந்தார்கள். பத்மாட்சி சிறிது வெட்கத்தையும் மனக்குழப்பத்தையும் அடைந்தாள். தாயார் அவளுக்குத் தைரியம் கூறினாள். பத்மாட்சியும் தாயின் தேற்றுதலுக்குப் பிறகு ஒருவாறு தைரியமடைந்து இளவரசரால் அறிமுகம் செய்து வைக்கப்படும் ஆடவனைக் காண மிகவும் ஆவலுடையவளாக நின்றாள். இதற்குள் இளவரசரும் அறையின் கதவைத்திறந்து, பத்மாட்சிக்காக ஏற்படுத்திய ஆடவனை அறையில் அழைத்து, "மாதர்களே! இதோ பாருங்கள். கனம் கபூர் கிருஷ்ணனை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கின்றேன்" என்று கூறினார்.

அந்த ஆடவன் யாரென நினைக்கிறீர்கள். பிரசித்தி பெற்ற கபூர் கிருஷ்ணனே. இளவரசர் கூறியபடி கபூர் கிருஷ்ணன் ஜனகன் என்னும் வாலிபனை வெளிநாட்டுக்கு அழைத்துச்சென்று நல்ல உத்தியோகத்தில் அமர்த்திய பின்னர், அதற்குச் சன்மானமாக ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து விவாகத்தை முடித்து வைப்பதுடன் வருஷவாரி சுமார் எண்ணூறு ரூபாய்வரை வருமானம் வரக்கூடிய பட்டத்தையும் கொடுப்பதாக வாக்களித்திருந்தாரல்லவா? அதன்படி அவர் பத்மாட்சியை கபூர்கிருஷ்ணனுக்கு மணம்முடித்து விடுவதென ஏற்பாடு செய்தார். இம்மாதர்களிருவரும் வருவார்களென்றும் அவர்களிடம் அறிமுகம் செய்துகொள்ள அவன் தயாராக வரவேண்டுமென்றும் இளவரசர் தெரிவித்திருந்ததால் கபூரும் தக்கபடி தன்னை அலங்கரித்துக்கொண்டு அங்கு வந்திருந்தான். அவன் உண்மையிலேயே பார்வைக்கு விகாரமுடையவனல்ல. கூடியவரை அழகுள்ள தோற்றமுடையவனே. எக்காரியத்தையும் சாதிக்கக்கூடிய ஆற்றலையும் தைரியத்தையும் உடையவன். அவன் விலையுயர்ந்த

ஆடை ஆபாணங்களாலும் வாசனைத் திரவியங்களாலும், தன்னை அலங்கரித்துக்கொண் டிருந்தான்.

அம்மாதர்களிருவரும் கபூர் கிருஷ்ணனை இதற்கு முன் பல இடங்களில் பார்த்து அவனைப்பற்றித் தெரிந்துகொண் டிருக்கிறார்கள். அதுபோலவே கபூர் கிருஷ்ணனும் ஜய தேவியையும் அவளது குமாரியையும் பார்த்திருக்கிறான். இதனால்தான் இளவரசர் கபூர் கிருஷ்ணன் எந்தப்பெண்ணை மணந்துகொள்ள நேரிடும் என்பதுபற்றிக் கூறியபோது அவன் சந்தோஷமடைந்தான். ஆகவே இளவரசர் அம் மாதர்களுக்கு அவனை அறிமுகம் செய்து வைத்ததும் அவன் அவர்கள் இருந்த இடம் சென்று அவர்களுக்கு வணக்கம் செலுத்தினான். பத்மாட்சியும் கபூரை மணந்துகொள்ள விரும்பினாள் என்பதில் ஆட்சேபமில்லை. ஆனால் அவனுடைய கரிய நீண்ட அடர்த்தியான மீசையையும், அவன் செய்யும் குறும்புகளையும் கண்டுமட்டும் சிறிது வெட்க மடைந் தாள்.

அப்போது இளவரசர், "எனதன்புள்ள பத்மாட்சி! உனக்கு கபூர் கிருஷ்ணன் கணவனாக வாய்த்ததுபற்றி நீ வெட்கப்படவேண்டிய அவசியமே இல்லை. எனது பிரத் யேக நண்பனான அவன் உன்னைக் கலியாணமேடைக்கு அழைத்துச்செல்வது தனக்கும் ஒரு கௌரவமென்றே கருதுகின்றான். உனக்கும் அவன் விஷயத்தில் திருப்தி யிருக்குமாயின் விவாகத்தை அதிக நாள்வரை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை. நாளையதினமே கோயிலுக்குச் சென்று விடலாம். பிறகு நீங்கள் எங்கேனும் சிறிதுகாலம் தனியாக இருந்து இன்பம் நுகரலாம். உங்கள் விவாகத் தைப்பற்றிப் பத்திரிகைகளிலும் அறிவித்து விடலாம்," என்றார்.

உடனே கபூர் கிருஷ்ணனும் பத்மாட்சியிடம், "அழகிய மாதே! நீ என்னைக் கணவனாக ஒப்புக்கொண்டு விட்டாயென்றும், இளவரசர் இப்போது கூறிய யோசனைகளை அங்கீகரிக்கின்றாய் என்றும் நான் நம்பலாமா? இளவரசர் நம்மிருவருக்குமே பொதுவான நண்பராதலால் அவர் யோசனையைக்கேட்பது நமக்கு நன்மையையே தரும்." என்று மிக ஆவலுடன் கேட்டான். அதற்கு பத்மாட்சி தான் சம்மதப்பட்டதன் அறிகுறியாக அவளது கரத்தை நீட்டினாள். கபூர் கிருஷ்ணன் அக் கரத்தைப்பிடித்து அன்புடன் குலுக்கினான். உடனே அக் கையைத் தன் உதட்டினிடம் எடுத்துச் சென்று முத்தமிட்டான். அப்போது இளவரசரும் கபூர் கிருஷ்ணனிடம் அவனுக்குப் பட்டத்தையும் பதவியையும் அளிக்கும் அத்தாட்சிப் பத்திரத்தை அவனிடம் கொடுத்தார். அதேசமயத்தில் ஜயதேவியும் தன் வாக்குறுதியின்படி தன்னிடமிருந்த சீனன் எழுதிய கடிதத்தை இளவரசரிடம் கொடுத்துவிட்டாள். இளவரசரும் அதைத் தன் சட்டைப் பையில் பத்திரமாக வைத்துக்கொண்டார்.

பிறகு என்ன நடந்தது என்று இவர்களைப்பற்றி அதிகம் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆயினும் சுருங்கக் கூற வேண்டுமாயின் ஜயதேவியும் பத்மாட்சியும் இளவரசாது உத்தரவு பெற்றுக்கொண்டு கபூர் கிருஷ்ணனுடன் தங்கள் நட்பினளான பத்மாவதியம்மாளின் வீட்டுக்குச் சென்றார்கள். அவள் இவர்களுடைய விஷயம் முழுதையும் விசாரித்து அறிந்துகொண்ட பின்னர் மிக சந்தோஷமடைந்து மறுநாட்காலை கலியாணவிருந்து ஒன்றையும் நடத்த ஏற்பாடு செய்தாள். கபூரும் அவ்விருந்துக்கு இருப்பதாக ஒப்புக்கொண்டு அப்படியே இருந்தான். அவன் நல்லவனென்றும், பிடிவாதக்காரனல்லவென்றும் மாதர்கள் தெரிந்து கொள்ளும்

படி நடந்து கொண்டான். ஆயினும் அவன் விருந்தின் போதும், மற்ற சமயங்களிலும் மதுபானம் அபரிமிதமாக அருந்திபவிதத்தைக் கண்டுதான் அனைவரும் ஆச்சர்யமடைந்தனர்.

மறுநாட்காலை கபூர் கிருஷ்ணனும், பத்மாட்சியும் விவாகம் செய்துகொண்ட தம்பதிகளானார்கள். அவர்களிருவரும் தனியே இன்பமாகக் காலங்கழிக்க இரத்தினபுரியின் மற்றோர் பாகத்துக்குச்சென்று வாழலாயினர். ஜயதேவி, மகாராணியின் மாளிகைக்குச்சென்று பழையபடி தன் தோழி வேலையை ஆரம்பித்து விட்டதுடன் தன் மகளுக்குக் கலியாணமாய் விட்டதென்னும் சந்தோஷச் செய்தியையும் மகாராணியிடம் அறிவித்தாள். இந்த அத்தியாயத்தை முடிப்பதற்குமுன் கபூர் கிருஷ்ணனின் உண்மைத் துணைவனை எச்சனைப்பற்றிக் கூறுமல் இருந்து விடுவது சற்றும் நியாயமாகாது. எப்போதும் உண்மையுடன் உழைத்த எச்சன் கபூரின் கலியாணகாலத்தின்போதும், பிறகு அவர்கள் தனியே இன்பமாகக் காலங்கழிக்கச் சென்றபோதும் அவர்களுடனேயே இருந்து, தன் எஜமானன் இன்பம் அனுபவிப்பதை கண்டு மனமார சந்தோஷமடைந்தான். அவன் என்றும் பிரியாத் துணைவனுகவே இருந்தான்.

[library stamp]

178 - வது அத்தியாயம்

இரத்தினபுரியின் மற்றொருபாகத்தில் நம்முடைய இக்கதையில் சம்பந்தப்பட்ட சகோதரனும் சகோதரியுமான விசுவநாதன், அமிர்தம்மாள் ஆகியவர்கள் எந்நிலைமையில் வாழ்கிறார்கள் என்பதைப்பற்றிக் கவனிப்போம். அவர்கள் தாங்கள் குடியிருக்கும் சாதாரண எளிய வீட்டில் ஒருநாள் பகலில் அமிர்தம்மாள் தனது அறையில் உட்கார்ந்துகொண்டு ஊசிவேலை, அதாவது துணி முதலியவற்றின்மீது சித்திரம் வரைதல், செய்துகொண்டிருந்தாள். அவள் தூயவெண்மையான ஆடையை அணிந்து களங்கமற்ற கன்னியின் மனத்தினளாய் தன் வேலையைக் கவனித்துக்கொண்டே, தன் எதிரில் சிறிது கவலையுடன் உட்கார்ந்திருந்த சகோதரனுடன் எதை எதையோ பேசிக்கொண்டிருந்தாள். அவள் அவனுடன் பேசும்போது சிற்சில சமயங்களில் தலையை நிமிர்த்துவாள். அப்போது அவளைப் பார்த்தால் அவளது யௌவன பருவமும், அழகிய முகமும் தோள்களும் கண்டோர் மனதை வசீகரிக்கக்கூடியதாக இருந்தன. அதுமட்டுமல்ல. அவளுடைய முகம், அவள் கபடமற்றவள் என்பதையும், தூயமனத்தினள் என்பதையும் நன்கு எடுத்துக்காட்டிற்று.

விசுவநாதன்மட்டும் அதிகம் பேசவில்லை. ஆனால் அவனுடைய சகோதரி அவனைச் சந்தோஷப்படுத்த வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவனுடன் பல விஷயங்களைப் பற்றி பேசியபோது அவன் அப்போதைக்கப்போது சில விஷயங்களுக்குமட்டும் அன்புடனும் ஆதரவுடனும் பதில் அளித்து வந்தானென்றாலும் அவன் அச் சம்பாஷணையில் அதிக உற்சாகம் காண்பியாதவன்போலும், வேறு எங்கேயோ கவனமுள்ளவன்போலும் கவலையுடன் காணப்பட்டான்.

184563

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கோலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம், 5-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 6-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	..	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆு ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி ரூபா	1	0
5-பாகமும் ...	10	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம்2பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6. லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.